
www.tamilarangam.net

# சுவடுகள்



புதிய அரசும் இனப்பிரச்சினையும்

## இன்னொரு கானல்நீர் சமாதானம்

ஐரோப்பாவில் ஈழத் தமிழர்கள்

## நாடுகடத்தப்படும் அபாயம்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# ஐரோப்பாவும்தான்!

உலகில் பெரும்பான்மை நாடுகளில் அரசும் ராணுவமும் பொதுமக்கள்மீது தமது அடக்குமுறைகளைக் கட்டவிழ்த்து விடுகின்றன. சித்திரவதை, நியாயமற்ற கைதுகள் என்பன சாதாரண விடயம்தான். லத்தீனமெரிக்க, ஆசிய, ஆபிரிக்க நாடுகளில்தான் இந்தவகையான சித்திரவதைகள் நிகழ்கின்றன என்றே பரவலாக நம்பப் படுகிறது. கடந்த வருடத்திற்கான சர்வதேச மன்னிப்புச் சபை அறிக்கை, உண்மை அதுவல்ல என்று சொல்கிறது. 26 ஐரோப்பிய நாடுகளிலும் பொலிஸ் சித்திரவதை நிகழ்ந்துள்ளது என்று அறிக்கை ஆதாரபூர்வமாகக் கூறுகிறது. இவற்றால் சிலர் மரணமும் அடைந்துள்ளனர்.

குறிப்பாக மேற்கு ஐரோப்பிய நாடுகளின் சார்பு நிலை கொண்ட, நேட்டோ அணியில் இடம்பெற்ற துருக்கியில் மட்டும் சித்திரவதை காரணமாக இறந்தவர் தொகை (குறைந்தது) 24ஆகும். இது மட்டுமன்றி, நோர்வேயின் அயல் நாடுகளான சுவீடன், டென்மார்க்கும்

இடம்கொடுத்துள்ளன. ஆபத்தான நிலையில் இருந்த அரசியல் தஞ்சம் கோரிய ஒருவரை நாட்டைவிட்டு சுவீடன் பொலிசார் வெளியேற்றியமை கடுமையாக விமர்சிக்கப் பட்டுள்ளது.

உலகில் ஜனநாயக நாடுகள் என மார்தட்டும் பிரிட்டன, பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெய்ன், போர்த்துக்கல் என்பவற்றிலும் சித்திரவதைகள் நிகழ்ந்துள்ளன. நாஸிகளுக்குப் பெயர்பெற்ற ஜேர்மனி அங்குள்ள வெளிநாட்டவரை நடத்தும் விதம் இந்த அறிக்கையிற் கடுமையாக விமர்சிக்கப் பட்டுள்ளது.

சபையின் அறிக்கைப்படி கடந்த வருடம் உலகெங்கும் மனித உரிமைக்காகப் பாடுபடுவோர் அந்தநாட்டு அரசுகளால் மிக மோசமான முறையில் நடத்தப்பட்டும், பின்தொடரப்பட்டும் வந்துள்ளனர் என அறிக்கை கூறுகிறது. மனித உரிமைகளுக்காகப் பாடுபடுவோர்மீது கடும் நெருக்கடிகள் தொடுக்கப்படக் காரணம், ஆட்சியாளர்கள் தமது உண்மையான முகம் வெளியே தெரிவதை விரும்பாததாலேயே என மன்னிப்புச் சபையின் நோர்வேக் கிளைச் செயலர் கூறியுள்ளார்.



www.tamilarangam.net

• மஹிந்தன்

# ஈழத்திலும் போதைப்பொருள் அபாயம்



ஈழப்பகுதிகளுக்குப் போதைப் பொருள் பாவனையை அறிமுகம் செய்யும் அபாயங்கள் சில தென்படுகின்றன. பொதுவாக ஏகாதிபத்தியங்களும் மேலை நாடுகளும் இவ்வகை நடவடிக்கைகளில் முதன்மை இடத்தைப் பெறுகின்றன. இவ்வகையான நடவடிக்கைகள் இலங்கை அரசாலும் திட்டமிட்ட முறையில் மேற்கொள்ளப் படலாம்.

உலகின் பல பகுதிகளிலும் தேசிய சமூக விடுதலைப் போராட்டங்களில் இவ்வாறு மக்களை அடிமைப் படுத்தும் பழக்கங்களை அவர்களிடம் உருவாக்கி அதன்மூலம் மக்களது போராட்ட உணர்வை மழுங்கடிக்கச் செய்யும் போக்கு பரவலாகக் காணப்படுகிறது. இவ்வாறு மக்களைத் திசைதிருப்பும் நடவடிக்கைகளில் சீரழிவுக் கலாசாரத்தைப் பரப்புதல், போதைவஸ்துகளின் பாவனையை அதிகரிக்கச் செய்தல் என்பன முக்கிய பங்கு வகிக்கின்றன. இதன்மூலம் ஏகாதிபத்தியங்கள் தமது நலன்களுக்கு எதிரான முறையில் மக்கள் போராட்டங்கள் ஏற்படாமலும், தமது வருமானங்கள் அதிகரிக்கும் வகையிலும் பார்த்துக் கொள்கின்றன. போதைப் பொருளை ஒழிப்போம் என்று தமது நாடுகளில் அடிக்கடி இவை கூக்குரல் இட்டபோதும், அதை உண்மையில் ஒழிக்கும் நடவடிக்கைகளில் இவை இறங்குவதில்லை. அமெரிக்க அரசே பல போதைப்பொருள் வியாபாரங்களில் ஈடுபட்டதை உலகம் அறியும்.

விடுதலைப் போராட்ட காலகட்டங்களில் இவ்வாறான நிலை ஏற்படின் அது மிகவும்



www.tamilarangam.net


ஆபத்தான விளைவுகளைத் தோற்றுவிக்கும். ஈழத்தில் இந்த நிலை ஏற்படின் மக்களது தமது நெருக்கடிகளை இலகுவாக 'மறக்க' இந்த வழிகளை நாடலாம். ஈழத்தில் போதைப்பொருள் பாவனையை அதிகரிக்க, ஈழத்துடன் தொடர்புள்ள பகுதிகளில் போதைப்பொருட் பாவனையை அதிகரித்து அதன்மூலம் ஈழத்தின் பகுதிகளிலும் போதைப் பொருட்களைக் கிடைக்கச் செய்யலாம் என்ற நடைமுறையே கடைப்பிடிக்கப் படுகிறதுபோல் தெரிகிறது.

ஈழத்தின் தென்திசையில் - ஸ்ரீலங்காவில் - கடந்த ஐந்து வருடங்களில் மிக மோசமான முறையில் போதைப்பொருட் பாவனை அதிகரித்துள்ளது. பல ஆயிரம் பாடசாலை மாணவர்கள்கூட போதைவஸ்துகளின் நிரந்தர அடிமைகளாக உள்ளனர். தமிழ்நாட்டிலும் போதைப் பொருட்களின் பாவனை அதிகரித்து வரும் சூழலில் ஈழம் விழித்திருப்பது அவசியம்.

## பின்தள்ளப்பட்டது நோர்வே

உலகில் மூன்றாம் உலக நாடுகளுக்கு அதிக உதவி வழங்கிவரும் நாடுகளில் ஸ்கன்டினேவிய நாடுகள் முக்கிய இடம் வகிக்கின்றன. நாட்டின் மொத்த வருமானத்தில், ஏனைய நாடுகளுடன் ஒப்பிடும்போது அதிக அளவை இவ்வாறு செலவிட்ட நாடுகளில் நோர்வே முதலிடம் வகித்தது. தற்போது அந்த முதலாமிடம் டென்மார்க்கிற்குச் சென்றுவிட்டது.

1980ல் வளர்ச்சியடைந்த நாடுகள் தமது மொத்த வருமானத்தில் ஒரு சதவீதத்தை மூன்றாம் உலக நாடுகளின் அபிவிருத்திக்குச் செலவிடுவதாக ஐக்கிய நாடுகள் சபையில் ஒத்துக்கொண்டன. 1982ல் நோர்வே அந்த இலக்கை எட்டியது. அதிலிருந்து, சதவீதப்படி அதிகளவு உதவி புரியும் நாடாக நோர்வே இருந்தாலும், கடந்த வருடம் டென்மார்க் அதனைத் தாண்டிவிட்டது. நோர்வேயின் மொத்த வருமானத்தின் 1.01வீதம் மூன்றாம் உலக நாடுகளுக்கு உதவியாக வழங்கப்பட்ட அதேவேளை, டென்மார்க்கின் மொத்த தேசிய வருமானத்தில் 1.03வீதம் இவ்வாறு வழங்கப் பட்டுள்ளது. கடந்த வருடம் மூன்றாம் இடத்தில் சுவீடனும் (0.97%), நான்காம் இடத்தில் நெதர்லாந்தும் 0.81%) உள்ளன.




1970ல் 26.3கோடியாக இருந்த நோர்வேயின் உதவிகள் 1991ல் 765கோடியாக அதிகரித்தன என்பது குறிப்பிடத் தக்கது.

மனு

www.tamilarangam.net



கனடாவில் இருந்து
இளமுருகன்

# கனடாவில் எரிகின்ற தமிழர்.



இப்போ என்ற மாதிரிக் கிடக்கிறது, யாழ் நூலகம் எரிந்தது. முழு யாழ்ப்பாணமுமே தமது சொந்தப் பிள்ளைகளைப் பறிகொடுத்த மாதிரிக் கவலையில் தோய்ந்திருந்தது. அது நடந்தது 1981 மே 31க்கும் யூன் 1ம் திகதிக்கும் இடைப்பட்ட இரவு. மந்திரிமார் வழிநடத்த சிங்கள அரச படைகள், காடைகளின் துணையுடன் செய்து முடித்தன. அப்போது ஆனந்த விகடனில் சுஜாதா ஒருலட்சம் நூல்கள் என்று ஒரு சிறுகதையைப் படைத்திருந்தார். கடல்கடந்து வாழும் தமிழர்களையும் ஒரு உலுக்கு உலுக்கிய துயர நிகழ்ச்சி இது.

இதனை ஒத்த மாதிரி தமிழரின் அறிவியல், கலாசாரத்தை அழிக்கும் இன்னொரு செயல் இவ்வருடம் மே மாதம் 23ம் நாள் கனடாவில் நிகழ்ந்தது. பல அரிய நூல்களையும் ஆவணங்களையும் கொண்டிருந்த தேடகம் நூலகம்தான் இவ்வாறு தீக்கிரையானது. இந்த நூலகம் தேசபக்தர்கள், முற்போக்குவாதிகள், கலை இலக்கியப் படைப்பாளர்கள், சுவைஞர்களால் உருவாக்கப் பட்டது. கனடா அரசின் எந்த உதவியும் இன்றி பொருளாதார நெருக்கடிக்குள்ளும் தளராது பணியாற்றி வந்தது இந்த நூலகம். இந்த நூலகம் ஏராளமான தமிழர்களுக்கு அறிவுத் தேட்டமாக விளங்கியது.

இந்த நூலக எரிப்பிற்கு யாரும் உரிமை கோரவில்லை. இது கனடாவில் நிகழும் விக்டோரியா தினக் கொண்டாட்டங்கள் நிகழ்ந்த வேளை இரவு ஒரு மணியளவில் நிகழ்ந்துள்ளது. வீதிகளில் இந்த வேளை வாணவேடிக்கைகள் நிகழ்ந்து கொண்டிருந்தன. இந்தச் சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திச் சமூகவிரோதிகள் பெற்றோல் குண்டை ஜன்னல் வழியே வீசியுள்ளனர். இதனால் ஏற்பட்ட தீ பலத்த சேதம் விளைவித்தது. மிகச் சிரமப்பட்டுத் தேடிய பல அரிய நூல்கள் தீயினால் நாசமாகின.

இது யார் செய்த செயல் என்பதற்கு நேரடிச் சாட்சியம் இல்லை. இதுபற்றி ரொறன்ரோவில் 'துப்புத் துலக்கியபோது', மூன்று வாரங்கள் முன்னதாக பாரிஸில் சபாலிங்கம் கொல்லப் பட்டதைக் கண்டித்துத் தேடகம் கூட்டம் நடத்தியது. இது கொலைகாரர்கட்கு ஆத்திரத்தை மூட்டியது, எனவே அவர்கள் ரொறன்ரோவில் நூலவத்தைத் தீயிட்டனர் என்று பரவலாகக் கதைக்கப் பட்டதை

www.tamilarangam.net

அறியமுடிந்தது.

ஒரு கடைக்காரரின் தகவற்படி இதன் பின்னணி நீண்டது. சபாலிங்கம், ராஜினி கொலைக்குக் கண்டனம், ஈழநாடு எரிப்புக்குக் கண்டனம் என்பன இந்த எரிப்பிற்குக் காரணமாகக் கற்பிக்கப் பட்டன. இதைவிடத் தேடகத்தில் பல்வேறு சஞ்சிகைகள் வேறுவேறு நாடுகளில் இருந்து வருகின்றன. இவை பலரால் படிக்கப் படுகின்றன. இது ஒரு குறித்த அமைப்பினருக்குப் பிடிக்கவில்லை என்பதாலும் இது நடந்திருக்கலாம் என்றார். நானும், அந்த அமைப்பினர் யார் என்று கேட்டேன். அதற்கு அவர் புன்னகைத்துவிட்டு, சர்வதேச ரீதியான ஒரு தமிழர் அமைப்புத்தான் என்றார்.

இதுபற்றி மேலும் விசாரித்ததில் தேடகத்திற்கு அருகில் வசிக்கும் ஒருவர் கூறிய தகவற்படி, தேடகம் எரிக்கப்படச் சில நாட்களின் முன் ஒரு 'கறாக்' குழு ஒன்று தேடகம் நூல் நிலையத்திற்குமுன் ஒரு 'கறா'க் குழுவினர் வந்து நின்றனர். இதில் சுமார் 10, 12பேர் இருக்கும். இவர்களது நடவடிக்கைகளால் கலாட்டா வரும் என்று சந்தேகப்பட்ட ஒருவர் பொலிசாருக்கு தெரிவித்துள்ளார். பொலிசைக் கண்டு அனைவரும் ஓட்டம் பிடித்தனர். ஒருவர் மட்டும் காரினுள் ஏறி அமர்ந்துகொண்டார். அவருக்குச் சாதுவான வெறி, அவரைச் சோதனையிட்டபோது பொலிசார் அவரது இடுப்பிலிருந்து விழுந்த பிஸ்டலைக் கைப்பற்றியுள்ளனர். இதன்பின் அவர் கைதானார்.

தேடகத்தின் வாசகர் ஒருவரோடு பேசியபோது, "சந்தேகம் வந்திருக்காது. ஆனால் தேடகம் எரிக்கப்பட்ட ஒருசில மணி நேரத்திற்குள் புலிகளின் செய்தியில், தேடகம் குழுவினர் புலிகளுக்கு எதிராகப் பிரசாரம் செய்வதற்காகத் தாமே நூலகத்தை எரித்துவிட்டுப் பழியைப் புலிகள்மேல் போடுகிறார்கள் என்ற தொனியில் செய்தி வெளியிட்டார்கள். புலிகள்தான் எரித்தார்கள் என்று தேடகம் சார்பான எந்தச் செய்தியிலாவது வராமல், அதுபற்றித் தேடகம் ஒரு அறிக்கையை விடாமல் புலிகளால் எப்படி இந்த முடிவிற்கு வரமுடிந்தது? இதுதான் சந்தேகத்திற்குக் காரணம்" என்று கூறினார் அவர். அவர் குறிப்பிட்ட அந்தச் செய்தி அன்று புலிகளால் அவர்களது உத்தியோகபூர்வமான தொலைபேசிச் செய்தியில் தமிழ்கூறும் நல்லுலகெங்கும் பரப்பப் பட்டது.

இது பற்றி ரொறன்ரோ வாழ் தமிழறிஞர் ஒருவரிடம் கேட்டபோது "சரி, ஒரு வாதத்திற்குப் புலிகள் கூறுவதை உண்மை என்று எடுத்தால், ஒருவன் தனது எதிரிக்குச் சகுனப் பிழை என்று தனது கண்களைக் குத்திக் கொள்வானா? இத்தனை வருடகாலம் பல அரிய நூல்களைத் தமது சொந்த முயற்சியால் தேடிச் சேகரித்து, அரச உதவிகள் ஏதுமற்ற நிலையில் அவற்றைத் தமிழ் மக்கள் பாவிக்கக்கூடிய வகையில் ஒரு நூலகத்தில் ஒழுங்காகச் சேகரித்து வைக்கக்கூடிய பொறுமை எல்லோருக்கும் இல்லை. தேடகம் குழுவினர் ஒரு தீவிர பொறுமைசாலிகள். அவர்களது சேகரிப்பு கனடாத் தமிழ் மக்களுக்கு மட்டுமல்ல, எதிர்காலத்தில் தமிழக, ஈழத் தமிழர்களுக்கும் பயன்படக் கூடியது. அப்படிக் கஷ்டப்பட்டுக் கிடைக்க முடியாத புத்தகங்களைச் சேகரித்த தேடகமே நூலகத்தை எரித்ததாகக் கூறுவது சரியில்லை. நல்லவேளை, இது முதல் நடந்திருந்தால் யாழ்ப்பாண நூலகம் எரிக்கப்பட்டது யாழ்த் தமிழர்களால். சிங்கள அரசாங்கத்துக்கு எதிராகச் சர்வதேச ரீதியிலான அபிப்பிராயத்தை ஏற்படுத்தத்தான் அது செய்யப்பட்டது என்று ஜேயார் கூறக்கூடிய நிலை வந்திருக்கும்" என்று கூறியவர்

www.tamilarangam.net



கடைசியாக ஒன்று கூறினார் "தம்பி, புத்தகத்தை வாங்கிறவன் ஒரு புத்தகத்தைத் தொலைச்சாலே எவ்வளவு கவலைப்படுவான். அப்பிடியிருக்க புத்தகத்தைத் தேடிச் சேகரிக்கிற ஒரு குழுவைப் புத்தகங்களை எரிக்கிறாங்கள் என்கிறமாதிரிக் குற்றம் சாட்டிறது நல்லதில்லை".

ஒரு சராசரித் தமிழர், கனடாவில் நீண்டகாலம் வசிப்பவர். எல்லாச் சராசரித் தமிழர்களும் போலத் தானுண்டு தனது வேலையுண்டு, பணம் சம்பாதித்துத் தனது குடும்பத்தை நிலைநிறுத்தினாற் போதும் என்றிருப்பவர் இதைப்பற்றிக் கேட்டபோது, "அவர் எரிச்சாரோ இவர் எரிச்சாரோ என்று எனக்குத் தெரியாது. ஆனால் நூலகத்தை எரிக்கிறது நல்ல வேலையில்லை. இந்தக் குப்பை அடிபிடியள் எனக்கு விளங்கேல்லை...." என்றார். இதுதான் அனேக கனடாத் தமிழர்களின் கருத்து என்றும் அவர் மேலும் சொன்னார். "அங்க எதிரி எரிச்சான், இங்க தமிழன் எரிக்கிறான். நாங்கள் ஒருமாதிரி இவ்வளவுகாலம் சண்டைபிடிச்சு எங்களுக்குள்ளயே எதிரியை உண்டாக்கியிருக்கிறம். நூலகத்தை எரிக்கிற அளவு தமிழன் தாழ்ந்துபோனான்" என்று சலித்தர் அவர்.

நூலகத்தை யார் எரித்தார்கள் என்று நிருபிக்கப் படாமற் போகலாம். கடைசியாகக் கிடைத்த சில தகவல்களின்படி தேடகத்தைச் சேர்ந்த சிலர் வேலைக்குச் செல்கையிற் சிலராற் பின்தொடரப் பட்டதாகவும், இது பய உணர்வை ஏற்படுத்தவே என்றும் கூறப்படுகிறது. ஒருவர் தான் பின்தொடரப்படுவதை அறிந்து, தொடர்ந்தவரைக் கைது செய்ய வழிவகை பண்ணியதாகவும் ஒரு செய்தி கிடைத்தது. இந்தப் பின்னணியைப் பெரிதாக்கி, நூலகத்திற்கு வருபவர்களுக்குப் பயம் ஏற்படுத்தச் சிலர் முயன்று வருவதாகவும் செய்திகள் கூறுகின்றன.


சுவடுகள்
தமிழ் மாத இதழ்

ஆசிரியர் குழு
துருவபாலகர்

சந்தா
பன்னிரு இதழ்களுக்கு
300 குறோணர்கள்

தொடர்புகள்
**Herslebs gt43,**
**0578 Oslo**


* சமுத்திரனின் சோவியத் யூனியன் பற்றிய கட்டுரை தவிர்க்கமுடியாத காரணங்களால் இடம்பெறவில்லை. விரைவில் தொடரும்.

* சுவடுகள் ஆறு வருடங்களை நிறைவு செய்வதையிட்டுச் சிறப்பு மலர் ஒன்றை வெளியிடத் தீர்மானித்துள்ளோம். வாசகர்கள், படைப்பாளிகளிடம் இருந்து படைப்புகள் வரவேற்கப்படுகின்றன.

* இதுவரை சந்தா அனுப்பாத வாசகர்கள் தயவுசெய்து சந்தாவை அனுப்பி உதவவேண்டுகிறோம். மூன்று இதழ்களுக்குமேல் தொடர்ச்சியாகச் சந்தா அனுப்பாமல் இருக்கும் ஐரோப்பிய வாசகர்களுக்கு இனிமேல் சுவடுகள் அனுப்பப்பட மாட்டாது.

* சந்தா அனுப்புவோர் தயவுசெய்து வங்கியூடாக மாத்திரமே பணத்தை அனுப்பவும். எமது வங்கிக் கணக்கிலக்கம் 160752 13062. வங்கியின் பெயர் **SparebankenNOR.**

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



மணாளன்

# ஒரு கேள்வி ஒரு பதில்.



எம்மவரிடையே பல இசையமைப்பாளர்கள் வளர்ந்து வருகிறார்கள். சிலர் சுயமாக இசையமைப்பதிலும், சிலர் ஏற்கனவே இசையமைக்கப்பட்ட பாடல்களை மீள உருவாக்குவதிலும் கூடிய கவனம் செலுத்துகிறார்கள். ஒரு இசையமைப்பாளனின் திறமை ஒரு புதிய பாடலை உருவாக்குவதில் இருக்கிறதா? அல்லது ஏற்கனவே உருவாக்கப்பட்ட ஒரு பாடலை மீள உருவாக்குவதில் இருக்கிறதா? என்ற

கேள்வியை நோர்வேயில் உள்ள தமிழ் இசையமைப்பாளர்களில் ஒருவரான டி.எஸ்.நாதன் கிறிஸ்தோபரிடம் கேட்டேன். நாதன் என்று பரவலாக அறியப்பட்ட அவரது சுருக்கமான பதில் இது:

ஒரு இசையமைப்பாளனின் திறமை ஒரு பாடலைச் சொந்தமாக இசையமைப்பதில்தான் தங்கியுள்ளது. ஆனால் ஒரு இசையமைப்பாளன் சொந்தமாக இசையமைக்கும்போது, அந்தப் பாடல் வேறு ஒரு பாடல் ராகத்தைச் சேர்ந்திருந்தாலும், அவர் இசையமைக்கும் அந்தப் புதிய பாடல் கேட்பவர்களுக்கு இனிமையாக அமைவதிலேயே ஒரு இசையமைப்பாளனின் திறமை தங்கியுள்ளது. அதேவேளை வேறொரு இசையமைப்பாளர் தயாரித்த இசையை அப்படியே பிரதிபலிக்கச் செய்வது அந்த இசையமைப்பாளரின் திறமைக்கு வழிவகுக்கும்.

கலை இலக்கியக் காலாண்டிதழ்

தொடர்புகள்: 6 Square du Roule/ 92200 NEUILLY S/ SEINE/ FRANCE

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net





## புதிய அரசும் இனப்பிரச்சினையும்

# இன்னொரு கானல்நீர் சமாதானம்

வழமையான குத்துவெட்டுகள், வாள்வீச்சுகள், துப்பாக்கிச் சூடுகள் என்பவற்றுக்கு மத்தியில் இலங்கையின் பத்தாவது பொதுத் தேர்தல் நிகழ்ந்து முடிந்துள்ளது. முதற் தடவையாக வாக்காளர் தொகை ஒருகோடியைத் தாண்டியிருந்த இந்தப் பொதுத் தேர்தலில், முதற் தடவையாகப் பல லட்சம் வாக்காளர்கள் தமது வாக்குகளைப் பயன்படுத்த முடியாத சூழலும் நிலவியது. இடம்பெயர்ந்த மக்கள், அன்றாட வாழ்வுக்கு அத்தியாவசியப் பொருட்களே கிடையாத நெருக்கடியில் உள்ள மக்கள், துரத்தப்பட்ட மக்கள் என்று கணிசமான மக்கள் தமது தினசரி வாழ்வே கேள்விக்குறியான நிலையில் இந்தப் பொதுத் தேர்தல் நடாத்தப் பட்டது. இந்தப் பொதுத் தேர்தல் முடிவுகள் பதினேழு வருடகாலம் ஆட்சியில் இருந்த ஐதேகவின் அரசியல் அதிகாரத்தை ஓரளவு முடிவிற்குக் கொண்டுவந்துள்ளன.

1977ல் ஐக்கிய தேசியக் கட்சி பெற்ற பாரிய வெற்றியுடன் ஒப்பிடுகையில், தற்போது சுதந்திரக் கட்சி தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணி (பொஐமு) பெற்றது வெற்றியே அல்ல என்றும் கூறலாம். முக்கிய சிங்கள எதிர்க் கட்சிகள் அனைத்தையும் இணைத்த பொஐமு அறுதிப் பெரும்பான்மையைப் பெறமுடியவில்லை. தற்காலிகமாக முஸ்லிம் கொங்கிரசுடன் இணைந்து நின்று தனது ஆட்சியைக் காப்பாற்றும் நிலைக்கு முன்னணி தள்ளப் பட்டிருக்கிறது. இனப்பிரச்சனையைத் தீர்ப்பார் என்று இலங்கையிலும் வெளிநாடுகளிலும் பிரசாரம் செய்யப்பட்ட சந்திரிகாவின் தலைமையிலான பொதுஜன ஐக்கிய முன்னணிக்குப் பெருமளவில் தமிழ், முஸ்லிம் வாக்குகள் கிட்டியதாகத் தெரியவில்லை. ஆனால் பொதுஜன ஐக்கிய முன்னணி, ஐ.தே.கட்சியைப் போல நேரடியாக இனவாதப் பிரசாரம் செய்யாதது ஏனைய இன மக்களுக்கு ஒரு ஆறுதல் என்றே சொல்லவேண்டும். தாம் 150 பாராளுமன்ற உறுப்பினர்களுடன் ஆட்சிக்கு வந்தால் ஆறுமாதத்திற்குள் புலிகளை அடக்கிவிடுவோம் எனவும், சந்திரிகா பிரபாகரனுடன் இரகசியப் பேச்சுகளை நடத்துவதாகவும், இலங்கையை விற்றுவிட்டதாகவும் மிக மோசமான இனவாதப் பிரசாரத்தில் ஐக்கிய தேசியக் கட்சியும் அதன் பிரசாரப் பீரங்கிகளும் ஈடுபட்டிருந்தன. சந்திரிகாவுக்கு வாக்களித்தால் தமிழர் தாக்கப்படுவர் என்று பகிரங்கமாகச் சுவரொட்டிகள் ஒட்டப் பட்டிருந்தன. இத்தனைக்கும் மத்தியில்

www.tamilarangam.net



ஐக்கிய தேசியக் கட்சி வெற்றி பெறாமல் விட்டது, இனவாதப் பேச்சுகள் பெரியளவில் வாக்குகளை ஈர்க்கும் சாதனமல்ல எனக் காட்டிநிற்கிறது.

தெற்கு மாகாணத்தில் மாகாணசபைத் தேர்தல் நிகழ்ந்தபோதுதான் ஐக்கிய தேசியக் கட்சி தனது சரிவை உண்மையில் உணர ஆரம்பித்தது. ஆயினும் தன்னை உறுதிப் படுத்திப் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு எதிரான தேர்தல் அணியாக நிரூபிக்க அதனால் முடியவில்லை. கடந்த பதினேழு வருடங்களில் வாழ்க்கைச் செலவு உயர்வு, தெற்கில் மிக மோசமாக நடத்தப்பட்ட தாக்குதல்களால் உயிரிழந்த, காணாமற் போன அறுபதாயிரம் இளைஞர்கள், சகல துறைகளிலும் மலிந்துவிட்ட ஊழல் என்பவற்றுடன் கட்சிக்கு உறுதியான, மக்களைக் கவரக்கூடிய தலைமை இன்மை என்பன ஐக்கிய தேசியக் கட்சியின் தோல்விக்குக் காரணமாக அமைந்தன. இவற்றைத் தொண்டமானின் ஆதரவோ மலையக மக்களின் வாக்குகளோ காப்பாற்றும் நிலை இருக்கவில்லை. எனினும் பொதுஜன ஐக்கிய முன்னணியை உறுதியான ஆட்சி அமைக்க முடியாமல் தடுக்குமளவு ஆசனங்களைக் கட்சி கைப்பற்றியுள்ளது.

பொதுஜன ஐக்கிய முன்னணியின் தேர்தல் வாக்குறுதிகளும், பிரச்சாரங்களும் ஓரளவு தெளிவாக இருந்ததுடன் (சிங்கள) மக்களது முக்கிய பிரச்சனைகள் எனக் கருதப்பட்ட அனைத்தும் தேர்தல் விஞ்ஞாபனத்தில் உள்ளடக்கப் பட்டிருந்தன. முக்கியமாகத், தொடரும் யுத்தத்தை நிறுத்தி இனப்பிரச்சனைக்குச் சமாதானமான முறையில் தீர்வு (ஈழம் தவிர்ந்த அனைத்தையும் வழங்குவதாக சந்திரிகா கூறியிருந்தார்) காண்பதாகத் தேர்தல் பிரச்சாரத்தில் கூறிவந்தமை ஒரு நல்ல அம்சம். ஏனைய இன மக்களை இது பெரிதளவில் கவராவிட்டாலும், அவசியமற்ற, வீண் செலவுக்குக் காரணமான, வெற்றிபெற முடியாத யுத்தத்தை முடிவுக்குக் கொண்டுவருவதன் அவசியத்தை முன்னணி மக்கள் மத்தியில் பிரசாரப் படுத்தியது ஆரோக்கியமான விடயம். இதில் கட்சி நடைமுறை ரீதியில் வெற்றி பெறுமா என்பது வேறு கேள்வி.

கிழக்கிலும், வன்னியிலும் குறிப்பிடத்தக்க வெற்றியைக் கூட்டணி ஈட்டியது. முஸ்லிம் கொங்கிரசும் தனது இருப்பை நிலைநிறுத்தியுள்ளது. ஆனால் அண்மைக் காலங்களாகத் தனது போக்குகளைச் சீர்செய்ததாகக் காட்டிவந்த ஈழமக்கள் புரட்சிகர முன்னணியால் எந்த ஆசனத்தையும் கைப்பற்ற முடியவில்லை. ஏனைய இயக்கங்கள் மூன்று அமைத்த கூட்டணியும் தோல்வியைத் தழுவியது. தமிழர்களது வாக்குகளைப் பிரிக்கும் ஐக்கிய தேசியக் கட்சியின் தந்திரம் ஓரளவுக்குக் கிழக்கு மாகாணத்தில் வெற்றி தந்துள்ளது. இயக்கங்களுக்குப் பின்னால் மக்கள் அணிதிரண்ட காலம் போய் மீண்டும் கூட்டணியை மக்கள் அங்கீகரிக்கிறார்களோ என்ற சந்தேகத்தை உண்டாக்கியுள்ள இந்த முடிவுகள் தமது பயங்கரவாதத்தை அரசுடன் சார்ந்து நின்று நிகழ்த்திய இயக்கங்களுக்குத் தமிழ் மக்களின் வெளிப்படையான தீர்ப்பு எனக் கூறலாம். அதேவேளை இந்தியப் படைகளுடன் இணைந்து இலங்கையின் வரலாற்றில் (அதுவரை) மோசமான தேர்தலை நிகழ்த்திய ஈபிஆர்எல்எஃப்பும் மக்களின் ஆத்திரத்துக்குப் பலியாகியுள்ளது. பின்னணியில் கூட்டணிக்கு விடுதலைப் புலிகள் ஆதரவளிக்கிறார்கள் என்ற செய்திகளும் கூட்டணியின் வெற்றிக்குக் காரணமாக இருந்திருக்கலாம். விடுதலைப் புலிகளின் ஆதரவுடனேயே / அனுமதியுடனேயே தாம் தேர்தலில் நிற்பதாகக் கூட்டணி சில இடங்களில் பிரச்சாரம் செய்திருந்தது குறிப்பிடத் தக்கது.

யாழ்ப்பாணத் தேர்தல் இந்த நூற்றாண்டில் மிகப்பெரிய கேலிக்கூத்தாக

www.tamilarangam.net



நிகழ்ந்துள்ளது. ஆறுலட்சம் வாக்காளர் கொண்ட யாழ்த் தொகுதியில் ஆறாயிரம் வாக்காளர்களே வாக்களிக்கும் நிலை இருந்தது. அரசு தனது கட்டுப்பாட்டில் இருந்த பகுதிகளில் மட்டுமே நடத்திய இந்தத் தேர்தல் அடிப்படையில் ஜனநாயகப் பண்புக்கு முரணானது எனக்கூறிச் சில தமிழ்க் கட்சிகள் யாழ் தேர்தலைப் பகிஷ்கரித்தன. தீவுப்பகுதியில் பிரசாரத்தில் ஈடுபடச் சென்ற ஏனைய கட்சிகளுக்குப் படுக்கப் பாயும், உண்ணச் சோறும், குடிக்கத் தண்ணியும் கொடுக்கக் கூடாது என்று மக்களை மிரட்டி வைத்திருந்ததன் மூலம் அந்தப் பகுதிகளில் 'ஆட்சி'யில் இருக்கும் ஈபிடிபி, தான் ஜனநாயக வழிக்கு வந்துள்ளதை உறுதிப் படுத்தியது. இது மட்டுமன்றி யாழ் தேர்தல் முடிவுகள் கிளப்பியுள்ள சந்தேகங்களும், அங்கு உண்மையில் நிலவும் 'விடுவிக்கப்பட்ட' தன்மையை உறுதிப் படுத்துகின்றன. பலரது எதிர்ப்புக்கு மத்தியிலும் அரசு இந்தத் தேர்தலை யாழ்த் தொகுதியில் நடத்துவதில் உறுதியாக நின்றதற்குக் காரணம் அங்குள்ள ஆசனங்கள் அனைத்தையும் 'எப்பாடு' பட்டாவது ஈபிடிபி கைப்பற்றிவிடும் என்ற நம்பிக்கைதான். மிகச் சுலபமாகக் கள்ள வாக்குகள் போடப்பட்டு நிகழ்ந்த இந்தத் தேர்தலின்மூலம் ஒன்பது ஆசனங்களைக் கைப்பற்றிய ஈபிடிபி, அரசு எதிரணியினரிடம் போனதும், தான் பொதுஜன ஐக்கிய முன்னணிக்கு ஆதரவு வழங்குவதாக அறிவித்தது. ஈபிடிபியின் 'ஆதரவை'ப் பெற்றுத் தனது ஆட்சிக்குத் தமிழ் மக்களிடம் நிரந்தரப் பகையை வளர்க்க இப்போதைய அரசு விரும்புமா என்பது கேள்வியே.

மலையகத்தில் கீழ்த்தரமான சாதி அடிப்படையிலான பிரச்சாரங்கள் உட்பட, சாராயம், பணம் என்பவற்றால் பல வாக்காளர்கள் வாங்கப்பட்டனர்.

## உதயம்

மட்டக்களப்பில் இருந்து காலாண்டிதழாக வெளிவரும் புதிய சஞ்சிகை. கடந்த ஆறு ஆண்டுகளாகக் கிழக்கிலங்கையில் தமிழ் நூல்களின் வெளியீட்டில் முன்னோடிகளாகத் திகழும் உதயம் பிரசுராலயத்தின் வெளியீடு. படைப்புகளையும் ஆதரவுகளையும் வேண்டிநிற்கிறது. தொடர்புகள்: உதயம், 65 லேடி மனிங் டிறைவ், மட்டக்களப்பு.

இந்நிலையில் தனது சுயத்தை மறந்து ஐக்கிய தேசியக் கட்சியின் சின்னத்தில் போட்டியிட்ட இலங்கைத் தொழிலாளர் கொங்கிரசும், மலையக மக்கள் முன்னணியும் மலையகத் தமிழர்களுக்குப் போதிய பிரதிநிதித்துவம் பெற்றுத் தரவில்லை. ஏற்கனவே மலையக மக்களின் நிலை வறுமைக் கோட்டுக்குக் கீழேயே பல வருடகாலமாக நின்றுவந்துள்ளது. இப்போது பிரதிநிதிகள் குறைவது ஆரோக்கியமான போக்கல்ல.

தேர்தல் நிகழ்ந்த சில தினங்களிலேயே புதிய அரசு தனது அதிரடி நடவடிக்கைகளை உறுதியாக எடுப்பதாகக் காட்டிக் கொள்கிறது. ஏற்கனவே வழங்கப்பட்ட உறுதிமொழிகள் நடைமுறைக்கு விரைவில் வரும் என்று நம்பமுடிகிறது. இது, தன்னை நம்பி ஆதரவளித்த மக்களுக்குப் புதிய அரசு செய்யும் நன்றிக்கடன் என்று நம்பினீர்களெனில், ஏமாந்தீர்கள் விரைவில் இன்னொரு தேர்தலை நாடு எதிர்நோக்குகிறது; ஒரு தனிமனிதனிடம் அதிகாரங்களைக் குவிப்பதற்கான ஜனாதிபதித் தேர்தலே அது. அதிலும் வெற்றி பெறவேண்டும் என்பதில் பொதுஜன ஐக்கிய முன்னணி உறுதியாக நிற்கிறது - அவ்வளவுதான்.

www.tamilarangam.net

# முள்முடிகளும் மலர்க்காடுகளும்

**சாள்ஸ் – நெதர்லாந்து**

விரியாத மொட்டுக்களாய் குவிந்து நிற்கும் பலவர்ணப் பூக்கள். நீண்டு ஒரு பத்து மீற்றர் வரை தெரிந்த அந்தப் பூந்தோட்டம். அதன் நான்கு பாத்திகளும் விரித்துவிட்ட ஒவ்வோர் நிறக் கம்பளமாய் தெரிகிறது.

அது வெளிக் காற்றைத் தடுத்து, கண்ணாடியால் வேயப்பட்ட வீடுகளுக்குள் செயற்கை வெப்பத்தை வழங்கி ஒரு மாதகாலத்தில் வளர்த்தெடுத்துப் பூக்க வைக்கின்ற மிகப் பெரிய பூந்தோட்டங்கள்.



பூ உற்பத்தியில் செல்வம் பெறுகின்ற தோட்ட முதலாளிகளின் பகுதி. உலகம் முழுவதும் பேசப்படுகின்ற 'கொலண்ட் பூக்கள்' இன் உற்பத்தி.

விதையை கிளறிப் பத்து நாட்களில் உலரவைத்து, பின்னர் ஈரமாக்கி, முளைக்கவைத்து, ஒரு மாதத்தில் பூக்களாக்கி சந்தைக்கு விடுகின்ற துரித விஞ்ஞான உற்பத்தி இது.

இயந்திரங்களாலும், மின்சக்தியினாலும் – கதிர் இயக்கங்களினாலும் இயற்கை எவ்வளவு எளிதாக மாற்றப்படுகிறது என்பதற்கு இது எம் கண் எதிரே நடக்கின்ற ஒரு நல்ல உதாரணம்.

ஆயினும் பூக்களின் நிறக்கலப்பும், அவை மொட்டு விரித்துச் சிரிப்பதும், தாழம் இலைகளைப்போன்ற சிறிய இலைகளில் முத்துக்களாகத் தெரியும் நீர்த்துழிகளும் மிக ரம்மியமானவை– நான் அந்தப் பூக்களோடு உறவாடும் காதலனாய்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

எங்கும் வேலைகள் அமழியாய் நடக்கிறது. கார்த்திகைப் பூக்கிழங்குகள் போன்ற ருல்பன் கிழங்குகளை நடுவது ஒரு புறமும். மொட்டு விரித்துச் சிரிக்கின்ற பூக்களை பிடுங்கி பெட்டிகளில் பக்குவமாய் அடுக்குவதும். அவற்றை மேலே தொங்கும் அச்சுக்களில் சுழலுகின்ற வண்டில்களில் இருபுறமும் சமமாய் ஏற்றுவதும் வரிசையாய் நடக்கிறது.

குனிந்து தொடரும் புடுங்கலும்- நாரி உழைய நிமிரும்போது 'கோத்துறுடோமா'- 'குளோச்சக்' என்று கெட்ட வார்த்தைகளினால் திட்டுகின்ற முதலாளிக்குப் பயந்தும் வேலை மும்முரந்தான். நாம் பலர்.

போட்டிக்கு ஒடும் குதிரைகளாய்...

அது நெதர்லாந்தின் வடக்கேயுள்ள கடலோரக் கிராமங்களில் ஒன்று. காலம் காலமாக



சந்தோசமும், களிப்பும், காதலும், அன்பும், சோகமும், இழப்பும் என்ற எல்லா உணர்வுகளுக்கும் உகந்த 'பரிசுப்பூக்களாய்' பெற்றோரிலிருந்து காதலர்வரை உலகம் பூராகவும் போய்க்குவியும் இப்பூக்களின் சிரிப்பில் எனதும், எங்களதும் உழைப்பு வியர்த்து விழுந்து கிடக்கிறது. 'இதழ்களில் மின்னும் அத்துளிகள் எங்களுடையது'.

அகதிகளாக வந்த தமிழர்கள் பலர், பாண்- படுக்கை - குளிப்புத் திட்டத்தின் கீழ் அகதி முகாம்களுக்குள் குவித்து அடைக்கப்பட்ட காலங்களில் இக்கடலோரக் கிராமங்களிலும் சில அகதி முகாம்கள் திறக்கப்பட்டது.

பணத்தேவையும், பல்வேறு தேவைகளும் இத்தோட்டங்களை நாடி இளைஞர்களை வேலைக்கு விரட்டியது. வேலை அனுமதியில்லாமலே குறைந்த சம்பளமாயினும் இலங்கைக் கணக்கில் பெருக்கி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

திருப்திப்பட்டுக்கொண்டு நாம் முதலாளிமாரை 'வேலைதந்த தெய்வங்களாய்' பார்த்து உழைக்கத் தொடங்கிவிட்டோம். வேலை தேடிய அக்காலங்களில் எங்களுக்கு கிடைத்த இந்தத் தோட்ட வேலைகள் மிகமுக்கியமானவை. எமது கடின உழைப்பும் - முதலாளிகளின் திருப்திக்குரிய தொழிலாளர் களாகவும் இருப்பதனால் தான் என்னவோ.... தோட்ட வேலைகளுக்கு தமிழர்களைத் தேடுவது இன்னும் தொடர்கிறது.

நெதர்லாந்தில் பூ வேலை செய்யாத தமிழர்கள் மிகக் குறைவு என்றால் பொய்யில்லை.

'நான் அந்த வேலையில் மூன்று வருட' அனுபவசாலி.

ஆம்! அது ஒரு சனிக்கிழமை வேலையில் கெஞ்சி அரை நாள் 'விடுப்பு' வேண்டி முகாமுக்கு வந்தபோது அந்த நீல 'ஏறோகிறாம்' சேதி சொன்னது.

அண்ணன் - அவன்.

நான் சிறியவனாக படித்த காலம் வரை வயற் காடுகளில் போராடி குடும்பச் சுமைகளைப் பொறுப்பேற்று வளர்த்தவன். எப்போதும் ஒரு அதிகாரம் மிக்க அண்ணனாக இல்லாமல் ஒரு நல்ல நண்பனாய்.... எதையும் கதைக்கவும், விவாதிக்கவும், விட்டுக்கொடுக்கவும், நாசுக்காய்ச் சுட்டிக்காட்டவும் முடிந்த மனிதன் இப்போது எங்கிருக்கிறான்?

நான் இப்போது கண்களைக் கட்டிக் காட்டில் விடப்பட்ட மனிதன். எப்படித் தேடுவது? அகதி என்ற பெயரில் முகாமுக்குள் அடைக்கப் பட்டு, படுக்கையும் உணவும் கடிதம் போடத்தக்க காசும் கிடைக்கின்ற ஒரு வகைச் சிறைக் கைதி. வாரம் ஒருமுறை பச்சைக் காட்டில் 'விசா'. ஊசி போடவும் எக்ஸ்றே (x ray) எடுக்கவும் இன்னொரு நகர்.

நாம் 'மூன்றாம்' உலகிலிருந்து கொள்ளை நோய்களைக்

## ஸம்பவாமி யுகே யுகே

வியூகத்தை உடைத்தல் கடிது
ஆயினும் இயல்வது
வெளிவரல் இயலாதது
அறிவாய் நீ
ஆயினும்
ஆயுதம் பூண்ட நாற்படைகள் இழைத்த
அரண் பிளந்து உட்புகுந்தாய்
சாவு பெரும்பாலும் நிச்சயம்
அறிவாய் நீ
ஆயினும்
அக் களத்தில் அக்கணத்தின் தேவையும்
அக் கணத்தின் மனிதன் நீ என்பதும்
பெரியன
வரலாறு தீர்ப்பு வழங்குமென
அறிவாய் நீ

ஆயுதங்களும் அஸ்திரங்களும் கைநழுவ
மாரதர்களின் மேனியை நடுக்கியது
உன் மனவுறுதி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

அண்ணரைக் காணவில்லையாம்....?

"வவுனியாவரை சைக்கிளில் சாமான் வேண்டப் போனவர் திரும்பி வரவேயில்லை. அந்த நாட்களில் யாரும் இறந்து போனதற்கான அடையாளங்களும் இல்லை. என்ன நடந்தது என்று யாருக்கும் தெரியாது. பிடிபட்டிருக்கலாம். யார்? ஏன்?"

சின்னக்கா எழுதிய கடிதம் இது. அழுதிருக்கிறா என்பது கரைந்து தெரிந்த எழுத்துக்களாய் முகம் காட்டியது. அண்ணியும் இரண்டு குழந்தைகளும்... என்ன செய்வார்கள்?

அந்த மனிதனுடைய நினைவுகள்.. மிகமிகப் பசுமையானவை. அழுதேன் மீண்டும் மீண்டும் அழுதேன். அழுகையை என்னால் அடக்கமுடியவில்லை. நான் வளர்ந்ததன் பின்னர் அழுத நாட்கள் குறைவு. ஆனால் இன்று... இது என் நினைவுகளில் ஆற்ற முடியாத நாட்கள்.

கொண்டு வந்திருப்போம் என்று அவர்களுக்குப் பயம்.

ஆனால் நானோ என் நோய்க்கு மருந்தில்லை என்பது போல்....

எனக்கும், என் தேசத்தின் நினைவுகளால் நொந்து தொங்குகின்ற எம் போன்றவர்களுக்கும் யார் மருந்து போடுவார்கள்?

அன்னியச் சூழலில் எல்லா வகை நெருக்குதல்களுக்கும் ஆளாகி....

அடிக்கடி சிரிக்கவும், தன் பாட்டில் கதைக்கவும் எல்லாவற்றிலும் கோபமும், ஆத்திரமும் வெறுப்பும் கொண்டுள்ள மனிதர்களாய்... பலர். இந்த வாழ்வை வெறுக்கின்ற நினைவுச் சின்னங்கள்– நாங்கள்.

ஒரு புதிய வாழ்விற்கான உந்துதலும் கற்பனையும் வளர்கிறது.

தனியொருவனாய்ச்
சூழ்ந்து நின்று தாக்கிய மாவீரர் பலபேரைத்
தாங்குதல் இயலுமோ என எண்ணாது
விழுந்த தேர்ச்சில்லையும் ஆயுதமாய் உயர்த்தியது
உன் மனவுறுதி
ஏ அபிமன்யு
போரின் விதைகளைத் தூவிய
துகிலுரிதற் படலத்தின் கொடுமையும் கோழைமையும்
திரும்பவும் விளைந்தன உனைச்சூழ
உன் மரணம்
அறம்பெயர்ந்தோர்க்குக் கூற்றாயிற்று
பாரதப் போரின் திருப்புமுனையாயிற்று

"தருமம் நலிந்து அதருமம் தழைக்குங்கால்
வருவேன் யான் யுகந்தோறும் யுகந்தோறும்"
உன் மாமன் வரவில்லை
அவதார வேஷங்கள் காவிபூணும் யுகமொன்றில்
ஏ அபிமன்யு
ஆர்ப்பாட்டமின்றி
அவதரித்துப் போகின்றாய்
பெண்ணாக ஆணாக
விடுதலைப் படையாகப்
பணியமறுக்குந் தேசமாக

ஈற்றில்
இந்த யுகம் உன்னுடையது.

**சி.சிவசேகரம்**





www.tamilarangam.net

ஆனாலும் நடைப் பிணங்களாய்....

என்னை வெளிநாட்டுக்கு ஓட விரட்டிய இயக்கங்களும் அரசும்.

பக்குவமாய் நான் இங்கு வந்து சேர்ந்து விட்ட திருப்தி யிலிருந்த அண்ணன்.

நான்- அவன் அறியாத அவலம் நிறைந்த அகதியாய். அவன் அங்கே அவலம் நிறைந்த கைதியாய்?

அப்பாவிகள் கொல்லப் படுவதும், கைதுசெய்யப்படுவதும் எமது தேசத்தின் 'வீரம் நிறைந்த வரலாறு'. வரலாறும் ஒரு நெடுங்கோடாய்த் தொடர்கிறது.

அண்ணன் கொல்லப்பட வில்லை என்பது போல் அக்கா எழுதியிருப்பது ஏன்?


ஒரு அப்பாவித்தனமான நம்பிக்கையா?


ஒருவன் காணாமல் போவது

கடந்தகாலம் என் எல்லா நம்பிக்கைகளையும் இரத்தத் துண்டுகளாக வெடித்துச் சிதற வைத்த வெடி குண்டுகளாகத் தெரிகிறது.

"எல்லா அடக்குமுறை களையும் உடைத்தெறி" என்ற என் இளமைக்கால கோஷம் கோஷமாகவே நின்றுவிட்டது....?

இப்போது நாமெல்லாம் அரசியல் அநாதைகளாய் - அகதிகளாய்....





## மக்கட் தொகையும் மாநாடும்

உலகின் மக்கட் தொகை, அபிவிருத்தி பற்றிய மாநாடு இவ்வருடம் கெய்ரோவில் நிகழ்கிறது. 1974ல் ருமேனியாவிலும், 1984ல் மெக்சிக்கோவிலும் நிகழ்ந்த இம்மாநாடு, இம்முறை பெண்களின் மீளுறபத்தி உரிமை' பற்றி முக்கிய கவனம் செலுத்தும். இது மறைமுகமாக மூன்றாம் உலக நாடுகளில் அதிகரிக்கும் சனத்தொகையைக் கட்டுப்படுத்த முயலும்.
வளர்ச்சியுற்ற நாடுகளில் ஒரு பெண் தனது வாழ்வுக் காலத்தில் சராசரியாக

1.7குழந்தைகளைப் பெறுகிறாள். மூன்றாம் உலக நாடுகளில் இந்த வீதம் 3.6ஆகும். மாநாடு குடும்பத் திட்டம் பற்றி அதிக கவனம் செலுத்தும். அபிவிருத்தி உதவிகளில் குறிப்பிட்ட தொகை குடும்பத் திட்டத்திற்குச் செலவிடப்பட வேண்டும் என்று பல வளர்ந்த நாடுகள் முயல்கின்றன. அபிவிருத்தி உதவிகளில் மிகப் பெரிய பங்கைக் (4%) குடும்பத் திட்டமிடலுக்குச் செலவிடும் நாடாக உலகில் நோர்வேயே திகழ்கிறது.

மாயன்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

அல்லது கொல்லப்படுவது ஒரு நல்ல மனிதனாய் வாழ்ந்ததாலும் இருக்கலாம்.

வெறுக்கப்பட வேண்டிய யுத்தம் இது?

இந்த யுத்தம் நியாயமான துதானா?

இருக்கலாம் - ஆனால்.....

ஒருவர் மீது ஒருவர் போட்டியும் குரோதமும் மிக்கதாய் வளர்ந்து கழுத்தை நெரிக்கிறதே.

அப்பாவிகள் மீது கொடுமைகளைச் சுமத்தியிருக்கிறதே.

யுத்தம் - போராட்டம் என்றால் இப்படித்தான் என்கிற சமாதானத்தை என்னால் ஜீரணிக்க முடியவில்லை.

எமது உரிமைகளை நசுக்கிக் கொண்டு எமக்கு உரிமை பெற்றுத்தர போராட்டம் நடத்துவதாக எல்லோரும் சொல்கிறார்களே.

எப்படி நம்புவது?

நான் விரும்பும் உறக்கம் என்னை விட்டு விலகி விலகிப் போகிறது. நான் நேசிக்கின்ற என் காதலி என் கனவுகளில் வர மறுக்கிறாள்.

அவளையும் சிறைப்பிடித்து.... அல்லது கொன்று போட்டு விட்டார்களா?

நான் தஞ்சமடைந்திருக்கிற இந்த நாட்டில் மதுவிடத்திலும், புகையிடத்திலும் மற்றெல்லாப் போதைகளிலும் தஞ்சமடைந்து வீழ்ந்து கிடக்கவா?

முகாம் முழுவதும் செய்தியறிந்து பலர் ஆறுதல் சொன்னார்கள்.

பலர் இழப்புக்களோடு வாழ்பவர்கள்தான்.

அவர்கள் யுத்தமும் போராட்டமும் வேண்டாம் என்கிறார்கள்.

ஆயினும் என் இனிய நண்பர்கள் பலர் மீண்டும் புதிதாய்-புதிதாய்ப் போராடுவோம் என்கிறார்கள்.

10-10-93.

## பிழைகள்!

சிறுவர் பூங்காவில் இருந்து ஒரு தாய் தனது பிள்ளையைக் கூட்டிக் கொண்டு வந்தாள். இவள் நோர்வே நாட்டைச் சேர்ந்தவள். சிவப்பு வொல்வோ காரில் வந்த வட ஆபிரிக்கன் அவளைத் துப்பாக்கி முனையில் கடத்திச் சென்று குறுநாட்டில் (தூஒஎச) எறிந்து விட்டுப் போனான். பிள்ளை தனியாக வீடு வந்து சேர்ந்தது. அவள் பொலிசுக்குக் கொடுத்த தகவலின் படி இரண்டு வருடங்களுக்கு முன்பு இவள் அவனுக்கு எதிராகச் சாட்சி கூறியிருந்தாள் என்றும், அதற்குப் பழிவாங்கும் நடவடிக்கையாக இது இருக்கலாம் என்றும் கூறினாள்.

இதுபற்றிப் பல நோர்வேஜியர்கள் இப்படிக் கூறினார்கள்: "எமது நாட்டில் நடைபெற்ற சட்டவிரோதமான செயலுக்கு நாம் சாட்சி கூறக்கூடாதா? வெளிநாட்டவர் வேண்டுமானால் தமது நாட்டில் போய் சட்டவிரோதச் செயல்களைச் செய்யட்டும்" இப்படிக் கூறியதை எனது காதால் கேட்டேன். ஒரு வட ஆபிரிக்க முஸ்லீம் மகன் செய்த அடாவடித்தனத்தின் விளைவு, எல்லா வெளிநாட்டவர்களையும் பாதித்துள்ளது.

ஆகவே ஒரு வெளிநாட்டவன் செய்யும் சட்டவிரோதமான செயல் அவனுக்கு மட்டுமன்றி, அவனுடைய நாடு, மற்றைய வெளிநாடுகளுக்கும் ஈனப்பெயரை உருவாக்கித் தருகிறது.

திருச்செல்வம்-திலீபன்.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# சுவடுகள்

## ஐரோப்பியத் தமிழர்களும் நாடுகடத்தலும்

ஐரோப்பாவில் வசிக்கும் ஈழத் மிழர்களுக்குத் தமது தாய்நாடு பற்றிய கவலைகள் பிரச்சனைகள், நாட்டுக்குத் திருப்பி அனுப்பப்படுவதாக அறிவித்தல்கள் வரும்போதுதான் தோன்றுகிறதோ தெரியவில்லை. காரணம், நாட்டில் பிரச்சனை என்று இங்கு அகதி அந்தஸ்துக்குக்காக விண்ணப்பித்தோர், அகதி அந்தஸ்துக் கிடைத்ததோ இல்லையோ, இங்கு தங்குவதற்கான அனுமதி கிடைத்த மறுநிமிடம் அவர்களுக்கு நாட்டில் பிரச்சனை இல்லாதுபோய், நாங்கள் உழைக்க வந்தவர்கள் என்ற எண்ணம் தோன்றிவிடுகிறது.

இதன் பின்னணியாகக் கடந்த முப்பது வருடகால தமிழர் போராட்டம் பற்றிய விமர்சனமே வைக்கப் படுகிறது. சமூக உணர்வு பின்னடைந்த நிலையிலேயே உள்ளது. நாட்டின் மீதான அக்கறையீனம் பற்றி ஐரோப்பாவில் உள்ள அமைப்புகள், சங்கங்கள் கவலைப் படுவதோ, மக்களின் கவனத்தைத் தாய்நாட்டின்பால் ஈர்த்து அவர்களது செயற்பாடுகளையும் உதவிகளையும் நாட்டின்பால் குவிக்கும் வழிவகைகளையோ செய்வதில்லை. அதற்கு மாறாகத் தமக்குச் சந்தாப் பணம், வேறு நிதியுதவிகள் தந்தாற் போதும் என்ற மேம்போக்கான நிலையையே நாம் பல சந்தர்ப்பங்களில் காண்கின்றோம். இனிவரும் காலங்களிலாவது இவை மாற்றி அமைக்கப்பட வேண்டும்.

இதன் பின்னணியிலேயே கடந்த பத்து ஆண்டுகளாக ஐரோப்பிய தேசங்களுக்கு அகதிகளாகப் படையெடுத்த சிலர் சமூகம் பற்றிய தமது சிந்தனையை விடுத்துத் தாம் மட்டும் நல்லாக வாழ்ந்தால் போதும் என்ற அடிப்படையில் பல சமூகவிரோதச் செயல்களில் ஈடுபட்டதும், ஈடுபட்டு வருவதும் எம் சமூகத்தைப் பல்வேறு வழிகளில் பாதித்தே வருகிறது.

அண்மையில் நோர்வே அரசு சில தமிழர்களின் அகதி அந்தஸ்து விண்ணப்பம் நிராகரிக்கப்பட்டு அவர்களை இலங்கைக்குத் திருப்பி அனுப்பப் போவதாக அறிவித்துள்ளது. இவ்வாறு திருப்பி அனுப்பப்பட உள்ளவர்கள் கொழும்பைச் சேர்ந்தவர்கள் அல்லது கொழும்பில் நல்ல தொடர்பு உடையவர்கள் என்று அரச தரப்பில் கூறப்படுகிறது. அகதிகளுக்கான ஐ.நா.உயர்ஸ்தானிகரின் அறிக்கையை மட்டுமே கருத்திற் கொண்டு, கொழும்பு தமிழர்கள் பாதுகாப்பாக வாழக்கூடிய இடமெனத் தீர்மானிக்கப் பட்டுள்ளதாக அறியமுடிகிறது.

இது எந்தவகையிலும் நியாயபூர்வமானதல்ல. அடிப்படையில் இலங்கையில் யுத்தம் நிறுத்தப்படவில்லை; இனப் பிரச்சனை நியாயமான முறையில் தீர்க்கப்படவில்லை. தமிழர்களது பாரம்பரியப் பிரதேசங்களான வடக்கிலும் கிழக்கிலும் அவர்களுக்குப்

www.tamilarangam.net



பாதுகாப்பு இல்லை என்று சொல்லும் அரசு, எந்தவகையில் பௌத்த பேரினவாத ஆட்சியின் நேரடிக் கட்டுப்பாட்டில் உள்ள தெற்கைப் பாதுகாப்புப் பிரதேசம் எனலாம்?

இதுதவிரக் கடந்த ஆறு வருடங்களில் சிங்களப் பேரினவாத அரசினாலேயே அறுபதாயிரம் சிங்கள இளைஞர்கள் கொல்லப் பட்டிருப்பதும், கடந்த பதினைந்து வருட காலமாக அவசரகாலச் சட்டத்தின் கீழேயே ஆட்சி நடப்பதும், மிகமோசமான பயங்கரவாதத் தடைச்சட்டம் நடைமுறையில் இருப்பதும் மறக்கப்படக் கூடியனவா? இந்தியாவில் இருந்து பலவந்தமாகத் திருப்பி அனுப்பப்பட்ட அகதிகள், ஐ.நா. உயர்ஸ்தானிகராற் (UNHCR) பராமரிக்கப்படும் அகதிமுகாம்களிலேயே கைதாவது எதைக் காட்டுகிறது? தமிழர்களுக்கு இலங்கை பாதுகாப்பானது என்பதையா?

கடந்த சில வருடங்களாக நோர்வேயும் ஏனைய ஐரோப்பிய நாடுகள் சிலவும் கொழும்பும், தென்பகுதியும் தமிழர்களுக்குப் பாதுகாப்பான பிரதேசங்கள் எனக் கூறிப் பல தமிழர்களைத் திருப்பி அனுப்புவதில் குறியாக உள்ளன. சில தமிழ் அமைப்புகள் இது தவறான செயல் என்று சுட்டிக் காட்டியபோதும் இந்த நிலை மாறவில்லை. நோர்வேயிலும் ஏனைய ஐரோப்பிய நாடுகளிலும் தேசபக்தர்களும், புத்திஜீவிகளும், அறிஞர்களும் ஆயிரக் கணக்கில் இருந்தும் இந்த நிலையை மாற்ற முடியவில்லை. அவர்களும் இதுபற்றிஏனோதானோ என்ற நிலையில்தான் நடந்துகொள்கின்றனர். இவர்களிற் பலருக்கு நிரந்தர வதிவிட அனுமதி இருப்பதால் அவர்கள் நிலைமையின் தீவிரத்தைப் புரிந்துகொள்ளவில்லை என்ற குரல்களும் கேட்காமலில்லை.

இன்று பல தமிழர்கள் தமக்கு நிரந்தரத் தங்கும் அனுமதி கிடைத்துவிட்டால் முழுப் பிரச்சனையும் தீர்ந்ததுபோல் மாயையான எண்ணத்தில் உள்ளனர். இவர்களின் வாசற் கதவில், வளர்ந்துவரும் நிறவாதம் ஒருநாள் தட்டாது என்பது என்ன நிச்சயம்?


நோர்வேயில் பல தமிழ் அமைப்புகள் இருந்தும் தமிழ் மக்களது முக்கிய பிரச்சனைகளில் ஒன்றுபட்ட நடவடிக்கையில் ஈடுபடும் நிலைகள் குறைவு. ஒன்றுபட்ட, அனைத்துத் தமிழர்களையும் பிரதிநிதித்துவம் செய்யும் அமைப்பொன்று இங்கு இல்லாமையால் தமிழரது குரல் பலம் இழந்ததாகவே இருக்கிறது. இவ்வாறு நிலை தொடர்ந்தால் தமிழர்களுக்குப் பாதகமான விளைவுகளே ஏற்படும்.

இனியாவது தமிழர் அமைப்புகள் தமது குறுகிய நோக்கங்களைக் கைவிட்டுப் பரந்த தமிழர்களின் நலன்களின் அடிப்படையிற் செயற்பட வேண்டும். இது அவசர அவசரமாகச் செய்யப்பட வேண்டும். உடனடியாக இதைச் செய்யவேண்டும் என்பதை சுவிஸ், இந்திய நிலைமைகள் எமக்குக் காட்டுகின்றன. இதைச் செய்யத் தவறும் அனைவரும் வரலாற்றுக்குப் பதில் சொல்லியே ஆகவேண்டும்.

சுவடுகள் 58,
ஆனி94
(ஆவணி இறுதியில் வெளியாகிறது)

www.tamilarangam.net

எம்மிற் பலருக்கு வெகுவிரைவில் 'சிற்றிசன்' கிடைக்கப் போகிறதாம். இந்தக் கதை ஒஸ்லோவில் மாத்திரம் அடிபடுவதல்ல, நோர்வே முழுவதும் அடிபடுவது. எம்மவர் சிலருக்கு நாடுவிட்டு நாடுஓடி, நோர்வேயிற் குடியேறி ஒரு தசாப்தமும், பலருக்குப் பாதித் தசாப்தமும் முடிவடைகின்றது.



நோர்வே தமிழருக்கு என ஒரு வரலாறு உண்டு. 1980க்கு முன் தொழில் நிமித்தம் இங்குவந்த பலர், (1975ல் புதிய குடிவரவுச் சட்டம் அமுலுக்கு வந்தபோதும் சில தொழில்கட்குத் தொடர்ந்தும் அனுமதி வழங்கப் பட்டது) எழுபதுகளின் கடைசியில் மாணவ அனுமதி (student visa) பெற்று 'மாணவ அந்தஸ்து'டன் வந்தவர்களைப் பார்த்தால் 'ஓ நீங்கள் மாணவர்களா?' என்று நக்கலாகக் கேட்பார்களாம். எனினும் இந்நிலை வெகுவிரைவிலேயே தலைகீழாக மாறியது. 1986க்குப் பின் புற்றீசல்கள் போல இங்கு தமிழ் மக்கள் பலர் அகதிகளாக வரத் தொடங்கினார்கள். அப்போது 'மாணவ அந்தஸ்து'டன் இருந்த பலர் யாராவது தமிழ் அகதியைச் சந்திக்க நேர்ந்தால் முகத்தைச் சுளித்துத் தலையைத் திருப்பிக் கொள்வார்களாம். அதையும் மீறிக் கதைக்க வேண்டிய கட்டாய சூழ்நிலை ஏற்படின், 'ஓ நீங்கள் அகதிகளா?' என்று குசலம் விசாரிப்பார்களாம். அகதி என்றால் ஏதோ அருவருக்கத்தக்க உருவம் என்பது 'மாணவ மேதாவி'களின் கருத்தாக இருந்தது. இது மட்டுமல்ல விஷயம். 'ஓ அகதியா?' என்று அகதிகளை நலம் விசாரித்த சில மாணவ மேதாவிகள் நோர்வேக்குப் பின்கதவால் நுழைந்தவர்கள் தானாம். அதாவது ஏனைய ஐரோப்பிய நாடுகளில் முன்பு அகதி அந்தஸ்தில் இருந்தவர்கள் தானாம். வேறுசிலர் ஜேர்மன் கதவு வழியாக ஐரோப்பா நுழையக் காத்திருந்து விதிவசத்தால் மாணவ மேதைகள் ஆனவர்கள் தானாம்.

1987 காலகட்டம் நாட்டுப் பிரச்சனை பற்றிப் பக்கச் சார்பின்றி எடுத்துரைக்க அகதிகள் பலர் உதவி கேட்ட போதெல்லாம், எமக்கேன் வீண்வம்பு நாமுண்டு நமது தொழிலுண்டு நமது படிப்புண்டு (கவனியுங்கள், மாணவர் அந்தஸ்தில் இருந்தாலும் தொழில்தான் முதற்கண்) என்று இருப்பதையே இந்த மேதாவிகள் பலர் விரும்பினர். அரசியல் கதைத்தாலோ, நாட்டுப் பிரச்சனை பற்றிக்

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



கதைத்தாலோ ஏதோ செவ்வாய்க் கிரகத்தில் இருந்து வந்தவனைப் பார்ப்பதுபோல் பார்ப்பார்கள். எமது நாட்டின் வறுமை, எமது மக்களின் பசி பட்டினி, யுத்தத்தின் அகோரம் இவை பற்றியெல்லாம் வாய்திறந்து கதைக்கவே கூச்சப்பட்டனர். (பல 'உண்மை அகதி'களின் இன்றைய நிலையும் இதுதான்) 'ஐசே இதையெப்படி இவங்களிடம் கூறுவது? எங்களை, எங்கட நாட்டைப் (என்னே தேசப்பற்று) பற்றி எப்படி இப்படிக் கூறுவது?'

இது பழைய கதைதான். இத்துடன் சேர்ந்து இன்னொரு பழைய கதை உள்ளது. இதுவும் சிற்றிஸன்ஷிப் பற்றியதுதான். 'ஓ நீர் அகதிப் புத்தகமா? (புத்தகம்: கடவுச்சீட்டு)' 'இல்லையில்லை நான் கறுத்தப் புத்தகம் (இலங்கைப் பாஸ்போட்)' என மார்தட்டியவர்களில் பலர் மிகக் குறுகிய காலத்திலேயே அகதி அந்தஸ்துப் பெற்றவர்களின் 'சமூக அந்தஸ்து' கண்டு நிலைதடுமாறத் தொடங்கினர். ஓ.. ஓ... அகதியா என்று கேட்டவர்கள் ஓ... அகதியா எனச் சுருக்கி கடைசியில் நாம் 'ஸ்ருடன்ற்ஸ்' ஆக இருந்தாலும், நாங்களும் மாணவ போர்வையில் இருக்கும் அகதிகள்தானே என அமுக்கி வாசித்தனர். பிறகு என்ன கேட்கவா வேண்டும்? கல்தோன்றி, மண்தோன்றாக் காலத்திற்கு முன்தோன்றிய சமூகமல்லவா நாங்கள். சுயநலத்திலே பிறந்து சுயநலமாகவே வாழும் எங்களுக்குப் பூவைக்கக் கற்றுக் கொடுக்கவா வேண்டும்? படிப்பு, தொழில் மன்னிக்கவும், தொழில் படிப்பு என இருந்த மாணவ மணிகள் பலர் திடீரென அரசியல் பேசத் தொடங்கினர். நாட்டுநலன் பற்றியும் நாட்டின் வறுமை பசி பட்டினி பற்றியெல்லாம் மடைதிறந்த வெள்ளம் போலப் புட்டுப் புட்டு வைத்தனர். இல்லையில்லை நான் கறுத்தப் புத்தகம் என மார்தட்டிய பலரும் கறுப்பை நீலமாக்க நிகழ்ந்த பொலிஸ் விசாரணையில் 'நான் அந்த அமைப்பில் இருந்தனான்', 'அதன் மாணவர் அணித் தலைவராக இருந்தேன். ராணுவத்திடமும் இயக்கத்திடமும் சித்திரவதை அனுபவித்தேன்' என்றெல்லாம் புருடா விட்டார்கள். ஈழத்தின் மீதும் ஈழமக்கள் மீதும் திடீர் பாசம் பொங்கி வழிந்தது. (இவர்கள் அல்லவா எமது தேசத்தின் அஞ்சாநெஞ்சம் கொண்ட வீரர்கள்)

நீலத்திற்காக கறுப்பைக் கொடுத்துக் கட்சி மாறிய சிலருக்கும், நேரடியாக அகதியாக வந்த சிலருக்கும் வெகுவிரைவில் 'சிவப்பு' கிடைக்கவுள்ளது. அதாவது 'சிற்றிஸன்ஷிப்' - பிரஜா உரிமைதான் - கிடைக்கவுள்ளது. இதிலென்ன தவறு என்று நீங்கள் கேட்கலாம். எமக்குள்ள உரிமைகளின்

## நட்புப் பற்றி.....

**I**

சிலசமயம் கோப்பி குடிக்கவும்
சிலசமயம் பியர் குடிக்கவும்
உதவுகிறது.

சிலசமயம்,
முத்திரை சேகரிக்கவும் உதவாமல்
விலாசமற்றுப் போகிறது.

**II**

நட்பை
இழந்துபோவது சிரமம்.

அதைவிடச் சிரமம்
பொய்யான கைகுலுக்கல்களில்
நட்பைக்
கட்டி இழுப்பது.

**ஸவ்யஸாசி**

www.tamilarangam.net

அடிப்படையில் இந்நாட்டுப் பிரஜைகள் ஆவதில் தவறில்லை. அதிலும் சிலர் குறித்த காலம் வருமுன்பே விண்ணப்பித்துள்ளனர். இதுவும் தவறில்லை. ஆனால் எனக்குப் புரியாத ஒரு விஷயம் இருக்கிறது. அது, எமது மக்களின் சிந்தனை பற்றிய விஷயம். பாதி தசாப்தத்தைக் கடந்தவுடன் இந்த நாட்டுப் பிரஜாவுரிமைக்காக 'நாயாய்ப் பேயாய்' அலையும் நாங்கள் (போதாததிற்கு நோர்வேஜியன் இனவெறியன் என்ற குற்றச்சாட்டு வேறு) பலநூறு ஆண்டுகளாக எம்மிடையே ஒன்றாகச் சீவித்துவந்த முஸ்லிம் மக்களை உடுத்த துணியோடு அவர்களின் சொந்தத் தாயகத்தில் இருந்து பலாத்காரமாக வெளியேற்றியதை நியாயப் படுத்தினோம், படுத்துகிறோம். குறைந்த பட்சம் இதையிட்டு மௌனம் சாதிப்பவர்களையாவது மன்னிக்கலாம், நியாயப் படுத்துபவர்களை? இச்சமயம் யாழ் கன்னியர் மடப் பாடசாலை மதிலின்மீது காணப்பட்ட ஒரு வாசகம் நினைவிற்கு வருகிறது. மனிதநேயமற்ற உனக்குத் தனிநாடு ஒரு கேடா?

தமிழ் மக்களின் மனிதநேயம் பற்றிக் கதைக்க வெளிக்கிட்டால் கடைசியில் துண்டைக் காணோம் துணியைக் காணோம் என ஓட்டம் பிடிக்க வேண்டியதுதான். மனிதநேயம் வேண்டாம், குறைந்த பட்சம் மனச்சாட்சியாவது - கிலோ என்னவிலை என நீங்கள் கேட்பது புரிகிறது.



## முகம் முளைத்த சுவர்

பூமி வெடிக்கிற வெயில்
வேர்வை உதிர உதிர
நானும் அவனும் நடந்தோம்

மிக நீண்ட அவ்வீதியில் நிழல்தர
ஒரு வேப்பை மரத்தைத் தவிர
வேறொன்றும் இருக்கவில்லை.....
காலாற கீழ்நின்றோம்.

மேலிருந்து
சத்தமிட்டன காக்கைகள்.
அவன் காகம் பற்றி
ஒரு கதை சொல்ல ஆரம்பித்தான்.
அவன் ஆரம்பிப்பவைகள்
இலேசில் முடிவதில்லை.
வெய்யிலாயினும் மீளே நடப்பது
நல்லதெனப்பட்டது எனக்கு
அந்நேரம்.

மீளவும் நடந்தோம்.
அவன் காலிலொரு முள் தைத்தது
இடையில்.

முள்ளை எடுத்து அண்ணார
அருகிலிருந்த சுவரில் தெரிந்தன
இரு முகங்கள்.

சிலிர்த்த நான்
ஐஸ்வைத்த மீன்போல் விறைத்தேன்.

அம்முகங்களிலொன்றில்
புன்னகையிருந்தது.

தெருத்தொங்கல் வரையும் போய்த்திரும்பி
வந்த வழியாலே சென்றோம்.
அந்த இடம் வந்தது
சுவரிருந்தது
அம்முகங்களில்லை
புன்னகையுமில்லை.

அவனுடைய காலில் தைத்தமுள்
என் மனசில் தைத்தது
இப்போது.

என்.அன்பு,
காத்தான்குடி

www.tamilarangam.net



• சாள்ஸ் (சுவிட்சர்)

# உலகைக் கட்டும் ஒப்பந்தம்



(இக்கட்டுரை சில மாதங்களுக்கு முன்னர் எழுதப்பட்டது.)

சரித்திர முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படும் GATT (GENERAL ARGEMENT FOR TRADING & TARIFF) ஒப்பந்தம் இவ்வருடம் ஏப்ரல் 15ம் திகதி வெள்ளியன்று மொறோக்கோவிலுள்ள மறக்காஷ் (MARRAKESH) நகரில் 120 நாடுகளின் அரசியல் தலைவர்கள் கலந்து கொண்ட வைபவத்தில் கைச்சாத்திடப்பட்டது.

இந்த ஒப்பந்தத்தின் முக்கிய நோக்கம் உலகநாடுகளுக்கிடையிலான இறக்குமதி வரிகளையும், வியாபாரத் தடங்களையும் நீக்குவதாகும். இந்தக் குறிக்கோளுடன் 1947இல் உருவாக்கப்பட்ட 'காற்' நீண்ட காலமாகப் பல நாடுகளின் பல தடைகளையும் தாண்டி இப்போது ஒரு முக்கிய படியைக் கடந்திருக்கிறது.


கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் முழுமையாக நிறைவேற்றப்படும் கட்டத்தில் உலக நாடுகள் 250 கோடி டொலரை மேலதிகமாகச் சம்பாதிக்கும் என்று உலக வங்கி, காற் குழு, வளர்ச்சியடைந்த ஐரோப்பிய நாடுகளின் ஒன்றியம் (OCDE) என்பன தத்தம் அறிக்கையில் குறிப்பிட்டுள்ளன.

"இந்த ஒப்பந்தத்தின் மூலம் எந்தவொரு நாடும் நஷ்டமடையப் போவதில்லை" என்று திட்டவட்டமாகக் கூறுகிறார் காற் குழுத் தலைவர் பீட்டர் சதர்லாண்ட்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முதல் நாள் வெளியிடப்பட்ட உலக வங்கியின் பொருளாதார ஆராய்ச்சி மதிப்பீடொன்று வறிய நாடுகளான பங்களாதேஷ், சியரே லீயோன், எகிப்து, சூடான் போன்றவற்றை இந்த ஒப்பந்தம் கடுமையாகப் பாதிக்கும் என்று சுட்டிக் காட்டியுள்ளது.

பணக்கார நாடுகளின் குடிமக்கள் ஒவ்வொருவரும் தலைக்கு மூன்று குரோணர் லாபமும், வளரும் நாட்டுக் குடிமகன் தலைக்கு 30ஓரா(ore) லாபமும் ஒப்பந்தம் நிறைவேறுகையில் பெறும்போது ஒவ்வொரு ஆபிரிக்கக் குடிமகனும் 10ஓரா நட்டமடைவான் என்று சர்வதேச உதவி இயக்கங்கள் சிலவற்றின் கணக்கீடு

www.tamilarangam.net




E. NEIMANTIS

தெரிவிக்கிறது. அதே சமயம் உலக வறிய நாடுகள் ஒன்றித்து நிற்கும் பட்சத்தில் அவர்களால் உலக அளவில் தமது கோரிக்கைகளை முன் வைக்கவும், நிறைவேற்றிக் கொள்ளவும் முடியுமென்று சுட்டிக்காட்டப் பட்டுள்ளது. காரணம் காற் இல் - இணையும் நாடுகள் ஒவ்வொன்றிற்கும் ஒவ்வொரு வாக்குரிமை உண்டு. அதன் மூலம் 80% வாக்குகளை உலகின் வறிய நாடுகள் கொண்டிருக்கின்றன. ஒப்பந்தம் நடைமுறைப் படுத்தப்படுவதைக் கண்காணிக்க WTO (WORLD TRADE ORGARNISATION) என்ற நிரந்தரக் குழுவொன்று அமைக்கப்படவிருக்கிறது. அதிலும் அங்கத்துவ நாடுகள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு வாக்குகளைக் கொண்டிருக்கும்.

கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தம் குறிப்பிட்ட நாடுகளின் பாராளுமன்றங்களால் ஏற்றுக்கொள்ளப்படுமா, என்பது இப்போது இன்னொரு கேள்விக்குறி. ஒப்பந்தத்தின்படி இறக்குமதி வரிகள் கணிசமாகக் குறைக்கப் படுவதால் நாட்டின் வருமானம் குறையும் என்பதால் இவ்வொப்பந்தம்

ஏற்கனவே அமெரிக்காவின் பல பாராளுமன்ற உறுப்பினர்களால் விமர்சிக்கப்படுகிறது. ஒப்பந்தத்தின் இன்னொரு அம்சமான உள்நாட்டு விவசாயத்திற்கு அரசு அளிக்கும் மான்யம் பெரிய அளவில் குறைக்கப்பட வேண்டும். இது பிரான்ஸ், சுவீடன், நோர்வே போன்ற நாடுகளிலும் பிரச்சனைகளைக் கொண்டுவரும். ஒப்பந்தம் கைச்சாத்திடப் படுவதை எதிர்த்து இந்தியாவில் இம்மாத ஆரம்பத்தில் பெரிய அளவில் ஆர்ப்பாட்டங்கள் நடந்தன. நரசிம்மராவ் இந்த ஒப்பந்தத்திற்கான பாராளுமன்றப் பெரும்பான்மை அங்கீகாரத்தைப் பெறமுடியுமா என்பது மிகப் பெரிய கேள்விக்குறி. தென் கொரிய அமைச்சரவை ஒப்பந்தத்தை ஏற்றுக் கொண்டதால் பதவியைவிட்டே விலக வேண்டியதாயிற்று.



www.tamilarangam.net

# கண்டது



## கண்டவர் சொன்னது

• அயலான்

அண்மையில் ஒரு தொலைக்காட்சி நிகழ்ச்சியில் சற்றே ஆச்சரியம் தரக்கூடிய ஒரு செய்தியைப் பார்க்க முடிந்தது. ஒரு சத்திர சிகிச்சை, நோயாளியை வைத்தியர் நேரடியாகப் பார்க்காமலேயே நிகழ்த்தப்படலாம் என்று சொல்கிறது பிந்திய விஞ்ஞானம். கணனிகளும், இயந்திர மனிதர்களும் கொண்டு மனிதமூளை சாத்தியமாக்கிய விஷயம் இது. நோயாளியின் அருகில் இயந்திர மனிதன் இருந்துகொண்டு, எங்கோ தொலைவில் இருக்கும் வைத்தியர் தனது 'திரை'க்குமுன் உள்ள முப்பரிமாணப் பொருளில் நிகழ்த்தும் சத்திர சிகிச்சையை, அப்படியே இசகுபிசகின்றி நோயாளியின் உடலில் மேற்கொள்வதுதான் இந்த முறை. வைத்தியரின் அங்க அசைவுகளை அப்படியே இயந்திர மனிதன் பிரதிபலிப்பதாலும், அந்த இயந்திரச் சத்திரசிகிச்சையை வைத்தியர் தனக்கு முன்னால் உள்ள திரையில் கண்காணிப்பதாலும் தவறுகள் தவிர்க்கப் படுகின்றன என்று இந்தச் சத்திரசிகிச்சையைக் கண்டுபிடித்தவர்கள் கூறுகிறார்கள்.

தொழில்நுட்பத்தால் மனிதனுக்கும் மனிதனுக்குமான உறவுகள் குறைந்துகொண்டு வருவதை ஒருவிதத்தில் இந்தச் சத்திரசிகிச்சை குறிகாட்டி நிற்கிறது. இதே வேகத்தில் போனால், வேலையில் நின்றபடி (வீட்டிலுள்ள) பிள்ளைக்குச் சாப்பாடு கொடுக்கும் அம்மா, எங்கோ இருந்தபடி நூறு குழந்தைகளுக்கு எழுதப் பழக்கும் வாத்தியார், பாரிஸில் இருந்தபடி இந்தியாவில் படம் டைரக்ட் செய்யும் டைரக்டர் என்று பல கதாபாத்திரங்கள் இந்த வரிசையில் அறிமுகமாகலாம். இவைபோல, மனிதர்களை மனிதர்கள் சுடுவதைவிட்டு இயந்திர மனிதர்களால் சுட்டுக்கொள்ள முடியுமெனில் நலம்.

தமிழர்கள் இத்தனை அதிக தொகையில் புலம்பெயர்ந்தது சில நன்மைகளையும் விளைவித்திருக்கிறது. உதாரணமாகத் தொழில்நுட்ப ரீதியாக மிகப் பிந்திய சாதனங்கள், கருவிகளை மிக அருகில் இருந்து பார்க்க இயக்கச் சந்தர்ப்பம் கிடைத்துள்ளமையைக் கூறலாம்.

www.tamilarangam.net

இலங்கையில் வீடியோ அறிமுகமாகி நீண்டகாலம் ஆனாலும் இங்கு உள்ளதுபோல் பிந்திய தொழில்நுட்பத்துடன் கிடைக்கும் என எதிர்பார்க்க முடியாது. அதைவிட இங்கு உழைப்பவர் ஒருவருக்கு இலகுவாக ஒரு வீடியோவை வாடகைக்கு எடுக்க முடியும். எனவே தமிழரது கலைப் பதிவுகளுக்கு ஒரு நல்ல வாய்ப்பு இது. இங்கு நிகழ்த்தப்படும் நாடகம், நடனம் போன்ற மேடை நிகழ்வுகளை வேறு நாடுகள்வரை இலகுவாகக் கொண்டுசெல்ல வீடியோ வெகுவாக உதவுகிறது. இதைவிட இன்னொரு நன்மை அல்லது வசதி இந்த வீடியோவில் இருக்கிறது, அது 'குறுந்திரைப் படங்கள்' அல்லது 'தொலைக்காட்சித் திரைப்படங்கள்' (Teledramaதான், அவரவர் வசதிப்படி பெயரைக் கொள்ளுங்கள்).

குறுந்திரைப் படங்கள் என்றவுடன் ரூபவாஹினியின் அலட்டல்த் தனமான தமிழ் நாடகங்கள் நினைவு வந்தால் நான் அதற்குப் பொறுப்பல்ல. நான் சொல்ல வந்தது அவற்றைப் போன்ற தயாரிப்புகளை அல்ல. எமது வாழ்க்கையை எமக்குப் புரியும் விதத்தில் எங்களால் படமாக்க முடியும் என்பதைத்தான் சொல்ல வந்தேன். இங்கு எமது தினசரி வாழ்வில் நிகழும் சம்பவங்கள், எங்கள் வாழ்க்கை அனுபவங்கள் என்பன அழகாகப் படமாகக் கூடியவை. ஆனால் அவ்வாறான முயற்சியில் பலர் ஈடுபட்டதாகத் தெரியவில்லை. அண்மையில் பொம்மை மற்றும் ஐரோப்பிய இதழ்களில் பிரபலப்படுத்தப்பட்ட ஒரு (தொலைக்காட்சித்?) திரைப்படம், ஈழத்தில் புகழ்பெற்ற எழுத்தாளர்களில் ஒருவரான கீழ்க்கரவை பொன்னையனால் உருவாக்கப் பட்டது. ஆனால், அதைப் பார்க்கும் சந்தர்ப்பம் நோர்வேயில் உள்ள எவருக்கும் கிட்டியதாகத் தெரியவில்லை. ஏற்கனவே இவ்வாறான முயற்சிகளில் பாரிஸ் கலைஞர்கள் முன்னணியில் நிற்பதாகப் பத்திரிகைகளில் அறியமுடிகிறது. அந்தத் தயாரிப்புகள் ஏனைய ஐரோப்பிய நாடுகள் அனைத்திலும் கிடைக்கச் செய்வது நல்லது.

நோர்வேயைப் பொறுத்தவரை ஆறு வருடங்களுக்குமுன் சி.பிரேம்ராஜ் என்ற இளைஞர் தனது சொந்த முயற்சியில் தனது வசதிகளுக்கு ஏற்றபடி ஒரு குறுந்திரைப்படம் எடுத்திருந்தார். அவரது நெருங்கிய நண்பர்கள் மாத்திரமே பார்த்த அந்தக் குறுந்திரைப் படத்திற்குப் பின்னர் வேறு எவரும் (முழுப் படமாக) எதையும்



தயாரித்து முடித்ததாகத் தெரியவில்லை. இரு வருடங்களுக்கு முன் ஸ்தவாங்கரில் வசிக்கும் தமயந்தியின் வார்த்தைகள் ஏதுமற்ற ஒரு குறுந்திரைப்படம் உள்ளூர்த் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாயிற்று. ஏறத்தாழ எட்டு நிமிடங்கள் நீடித்த இப்படம் எவரையும் இலகுவில் பாதிக்கும் விதத்தில் எடுக்கப் பட்டிருந்தது. இவை தவிர்ந்து எனக்குத் தெரிய எந்தத் தமிழ்க் குறுந்திரைப்படமும் வரவில்லை.

இவற்றைவிட வடநோர்வேயில் சில தமிழ் இளைஞர்கள், காரோட்டம், சண்டைக் காட்சி (தமிழ்ப் படம்தான்!)

www.tamilarangam.net

இன்னபிறவற்றுடன் ஒரு குறுந்திரைப்படம் தயாரிக்க முனைந்ததாகச் சிலகாலம் முன்பாகச் செய்தி வந்தது. அதற்காகச் சில மாநகரசபைகள் பணம் வழங்கியதாகவும் அறியமுடிந்தது. கதாநாயகியைக் (!)கூட இவர்கள் தேடினார்கள். பிறகு அதுபற்றி எந்தக் கதையையும் காணவில்லை (யாராவது தகவல் அறிந்தால் சொல்லுங்கள்). இதேபோல் இங்குள்ள தமிழர் வாழ்வு பற்றி ஒரு குறுந்திரைப்படம் தயாரிக்க வேறு சிலர் முனைந்து அதற்காக நிதியும் பெறமுயன்ற செய்தி ஒரு நண்பர் மூலம் கிடைத்தது (பெற்றார்களா, தயாரித்தார்களா என்பதுவும் தெரியாது. அதையும் அறிந்தால் சொல்லுங்கள்). சரியான திட்டமிடலுடன் உறுதியுடன் ஈடுபட்டால் ஒரு நல்ல குறுந்திரைப்படம் தயாரிப்பது ஒரு பெரிய பிரச்சனை அல்ல. நேரம், ஆர்வம் இருப்பவர்கள் பார்வைக்கு இது சமர்ப்பணம்.

தமிழ் மக்கள் முன்னெப்போதையும் விட இலகுவாக உலக இலக்கியங்களை, கலைகளை அருகில் இருந்து தரிசிக்கும் வாய்ப்பைப் பெற்றுள்ளனர். உலகப் புகழ்பெற்ற ஓவியமேதை முங்க்கின் (Edward Munch) ஓவியக் காட்சியகத்தின் அருகாகத் தினசரி வேலைக்குச் செல்லும் வாய்ப்பு அனேக தமிழர்களுக்கு இருக்கலாம். 'ஒரு பொம்மை வீடு' நாடகத்தை எழுதி அழியாப் புகழ்பெற்ற இப்சன் (Henrik Ibsen) தினசரி கோப்பி குடித்த கட்டிடத்தில் பல தமிழர்கள் வேலை செய்கிறார்கள். நோர்வேயில் இப்படியென்றால் ஏனைய ஐரோப்பிய நாடுகளில் குறைவாகவா இருக்கப் போகிறது?

ஆனால், ஒரு பலத்த சந்தேகம். தமிழர்கள், இதுபற்றி எவ்வளவு தூரம் உணர்வு கொண்டிருக்கிறோம்? பெரும் சந்தேகம்தான். தமிழ் அழகான மொழி. சந்தேகமில்லை. தமிழில் அற்புதமான இலக்கியங்கள் உள்ளன. எமது கலைகள் பல பரிமாணங்கள் கொண்டு ஏனைய நாட்டவரை வியப்பில் ஆழ்த்துபவைதான். ஆனால் ஏனையோரது சிறப்புகளை

## நிம்மதி எங்கே

இந்தத் தேசத்தின்
சுதந்திரம்
இப்போ
துப்பாக்கியின்
துளையில்தான்
தூங்குகிறது!

கதிரவன் தூங்க
துயில்கொள்ளவேண்டும்.
கதிரவன் விழிக்க
துயில்நீங்க வேண்டும்.
இதுதான்
யதார்த்தமான விடியல்!

நிம்மதிச் சுதந்திரம்
இப்போது
சொப்பனத்தில்தான்!
அதுவும் –
துப்பாக்கி 'அலாரம்'
துயில் நீங்கினால்
மீண்டும்
காலையும்
மாலையும்
தேடுவோம்.......!

த.மலர்ச்செல்வன்

www.tamilarangam.net



அறிந்துகொள்வதில் நாம் நாட்டம் காட்டாது இருப்பது அறிவின்பாற் படாது. அப்படி நாம் நடந்துகொள்வோமாயின் எமது அறிவு மூடுண்ட உலகிற்குள் வந்துவிடும். தமிழின் நுணுக்கங்களையே சில சமயம் பிறமொழி அறிஞர்கள்தான் எமக்குச் சொல்லிக் கொடுத்திருக்கிறார்கள். அவ்வாறு பிறமொழியிலும், பிறநாட்டுக் கலை இலக்கியங்களிலும் நாம் சில சமயம் சாதனைகளை நிலைநிறுத்தலாம். யார் கண்டது? எமக்குள் சிறையுண்டு கிடக்கும் ஆற்றல்களை விரிப்போம். பிறமொழிகளில் இருக்கும் அற்புதங்களை அறிவோம், ஏனைய தமிழர்களுக்கும் அவற்றைச் சொல்வோம்.

இத்தனைகாலம் தமிழர்கள் புலம்பெயர்ந்தும், புலம்பெயர்ந்த நாட்டு மொழியில் பாண்டித்தியம் பெற்றவர்களின் எண்ணிக்கை விரல் விட்டெண்ணக்கூடிய அளவிலேயே உள்ளது என்றால், எங்கோ தவறிருக்கிறிது என்றுதானே கருத்து. விழித்திருக்கும் நேரமெல்லாம் எம்மைச் சுற்றி ஒலிக்கும் இந்த மொழிகளை (நாம் விரும்பாவிட்டாலும்) கற்பது கடினமோ, தவறோ இல்லையே. எத்தனை காலம்தான்

ஒரு மணியும், ஒரு கலாமோகனும், ஒரு சுசீந்திரனும், ஒரு ஆதவனும் மொழிபெயர்ப்புச் செய்ய நாமெல்லாம் கவிதை வாசிப்பது; கட்டுரை படிப்பது? காலம் பொன்னானதுதான், பொன் தேடும் நேரத்தில் மொழியறிவை வளர்ப்பது வீண்வேலைதான் என்று உங்களுக்கு ஊரில் இருந்து கடிதம் வரலாம். கவனமாக இருங்கள்.

**19வது ஐரோப்பிய தமிழ் இலக்கியச் சந்திப்பு (லண்டன்)**

**24.9.1994 சனி**
**காலை 9.30 - மாலை 6.00**
**25.9.1994 ஞாயிறு**
**காலை 9.30 - மாலை 10.00**

CONWAY HALL
25 RED LION SQUARE
HOLBORN
LONDON WC1R 4RL

HOLBORN

www.tamilarangam.net

# வட அயர்லாந்தும் காட்டப்படாத பயங்கரவாதமும்

சில மாதங்களுக்குமுன் ஓசைக்காக எழுதப்பட்டது இக்கட்டுரை. ஓசையிடமிருந்து நன்றியுடன் இங்கு பிரசுரமாகிறது.



பத்திரிகைச் செய்திகளையும், மிக அண்மைக்கால நிகழ்வுகளையும் மட்டுமே வைத்து மதிப்பிடுவதனால் வடஅயர்லாந்தின் பிரச்சனை வெறுமனே ஐரிஷ் விடுதலைப் படையின் (ஐ.ஆர்.ஏ) வன்முறையும் பயங்கரவாதமும் தொடர்பான பிரச்சனையாகவே தெரியமுடியும். ஐ.ஆர்.ஏ., என்னவோ, ஒரு நூற்றாண்டுக்கும் முன் தொடங்கிய விடுதலைப் போராட்டக் கனவில் இயங்கும் இயக்கமாகவும் வெறுமனே வன்முறை மூலம் அதிகாரத்தைப் பிடிக்கக் கனவுகாணும் சக்தியாகவும் தெரிய நிறைய இடமுண்டு. பயங்கரவாதத்தின் மூலம் மட்டுமே பிரச்சனைகளைத் தீர்க்க முடியாது என நான் நம்புகிறேன். ஆயினும் மக்களது நியாயமான போராட்டங்கள் அரசாற் கொடுமையாக நசுக்கப்படும் போதும் அயல் வல்லரசுகளது ஆதிக்கத்திற்கெதிராக மக்கள் விடுதலைக்குப் போராடும்போதோ அநீதியான வன்முறைக்கெதிராக நீதிக்கான வன்முறை எழுகிறது என்பதை மறுக்கமுடியுமா? நீதிக்காக எழும் வன்முறை திசைதவறிப் போகலாம். ஆயினும் அதற்காக மட்டுமே ஆயுதமேந்திய போராட்டத்தை நாம் நிராகரிக்க முடியாது. அடக்குமுறையாளர்கள் உருவாக்கும் போராட்ட விதிகட்கமைய ஒரு விடுதலைப் போராட்டத்தை எவரும் வழிநடத்த முடியாது. ஒரு விடுதலைப் போராட்டம் மக்களினின்று அந்நியமாகும்போது அது தன்னைத்தானே பலவீனப்படுத்திக் கொள்கிறது. அந்தளவில், அதன் போராட்ட நெறிமுறைகள் ஒடுக்கப்பட்ட மக்களது நலன் சார்ந்தும் சகல ஒடுக்கப்பட்ட மக்களையும் ஒருங்கிணைக்கும் நோக்கம் சார்ந்தும் அமையும்போது போராட்டம் வலிமையும்

வெற்றியும் பெறுகிறது. தவறுகளே செய்யாத இயக்கங்கள் இல்லை. ஆயினும் தவறுகளைத் திருத்தத் தயங்கி அவற்றை நியாயப் படுத்திக்கொண்டு மேலும் மேலும் தவறுகளைச் செய்துகொண்டு போகும் ஒரு இயக்கம் முடிவில் அழிவையே காணும்.

ஐ.ஆர்.ஏ. பற்றியும் வடஅயர்லாந்தில் அதன் அரசியற் கரமாகக் கருதப்படும் ஷின் பெய்ன் கட்சி பற்றியும் முன்வைக்கப்படும் விமர்சனங்களிற் சில அவர்களது தவறுகளை மக்கள் போராட்டக் கண்ணோட்டத்தில் விமர்சிக்க முனைவன. ஆயினும் நாம் அன்றாடம் கேள்விப்படும் விமர்சனங்கள் அவ்வாறானவையல்ல. அதை நாம் மேலும் கவனிக்குமுன் ஐரிஷ் விடுதலை வரலாற்றின் சில முக்கிய உண்மைகளைக் கவனிப்போம்.

ஆங்கிலேய ஆட்சி ரோமன் கத்தோலிக்க மதபீடத்துடனான முறிவை ஏற்படுத்திய அடிப்படையான காரணம் உற்பத்தி உறவுகளுடன் நெருக்கமானது. ஆங்கில முதலாளித்துவத்தின் வளர்ச்சியுடன்

www.tamilarangam.net

கொலனித்துவத்தின் வளர்ச்சியும் நெருக்கமாகப் பின்னிப் பிணைந்திருந்தது. பிரித்தானியத் தீவுகள் முழுமையும் ஆங்கில முடியாட்சியின் கீழ் வந்தபின்பு, ஆங்கில ஆதிக்கத்தின் விளைவாகப் புதிய பொருளாதார அரசியற் சூழலில் ஆங்கிலமல்லாத மொழிகளின் அழிவு நேர்ந்தது. அயர்லாந்தைப் பொறுத்தவரை அதன் பெரும்பான்மையினர் கத்தோலிக்கராக இருந்ததால் அடக்குமுறை கொடுமையாக இருந்தது. வடஅயர்லாந்தில் மேற்கொள்ளப்பட்ட குடியேற்றங்களின் விளைவாக ஸ்கொட்டிஷ மக்களின் வம்சாவழியினர் அங்கு குடியேறினர். இவர்கள் புரொட்டஸ்தாந்து மதத்தினராக இருந்தனர். இந்த மதவேறுபாடும் பிரித்தானியரது பிரித்தாளும் சூழ்ச்சிக்கு வசதியாயிற்று. ஒரு நூற்றாண்டுக்கும் முன்னரே ஐரிஷ் மக்களது விடுதலைப் போராட்டம் தொடங்கிய போது, ஐரிஷ் மக்களது விடுதலைப் போராட்டத்தை ஆதரிப்பது பிரிட்டிஷ் தொழிலாளி வாக்கத்தின் கடமை என்று காள் மாக்ஸ் கூறியதோடு, ஐரிஷ் மக்களது விடுதலை இல்லாமல் பிரித்தானிய தொழிலாளர்க்கு விடுதலை இல்லை என்றும் சுட்டிக் காட்டினார்.

ஐரிஷ் மக்களது போராட்டம் ஆயுதமேந்திய போராட்டமாக வளர்ந்தது. அதை முன்னின்று வழிநடத்திய ஐரிஷ் விடுதலைப் படையை பிரித்தானிய அரசு பயங்கரவாதிகளாகவே கருதி அவர்கட்கெதிராகத் தன் பூரண வலியைப் பிரயோகித்தது. ஆங்கிலேயரது கையிலேயே முழுப் பொருளாதார வலிமையும் இருந்த சூழலில், ஒடுக்கப்பட்ட ஐரிஷ் மக்களது உணர்வுகளை அவர்களது விடுதலைப் போராட்டம் பூரணமாகவே பிரதிபலித்தது. தொடர்ந்தும் அயர்லாந்தை நிர்வகிப்பதில் உள்ள பிரச்சனைகளை பிரித்தானியர் ஆட்சி உணர்ந்தாலும், போராட்டத்தைப் பலவீனப்படுத்துவதற்கு வடஅயர்லாந்தின் மக்களின் மதவேறுபாட்டைப் பயன்படுத்தியது. ஈற்றில் ஐரிஷ் மக்களது போராட்டத்தின்முன் பிரித்தானிய ஏகாதிபத்தியம் பணிந்தது. எனினும் எல்லாப் பிற்போக்குச் சக்திகளையும் போலத் தன் தோல்வியிலும் கெடுதலைச் செய்துவிட்டே வெளியேற முற்பட்டது. வடஅயர்லாந்தின் புரட்டஸ்தாந்து மக்களிடையே கத்தோலிக்க விரோத சக்திகளை ஊக்குவித்து அவர்கள் மூலம் அயர்லாந்தின் ஒரு பகுதியைத் தன்னுடன் வைத்திருக்க பிரிட்டன் முற்பட்டது. பிரிட்டனின் தாராளவாதக் கட்சியினர் அதிகாரத்தில் இருந்தபோது அயர்லாந்தின் விடுதலை பற்றிய உடன்படிக்கை ஏற்பட்டது. வடஅயர்லாந்து (அல்ஸ்ற்றர் என்று பிரித்தானிய ஆதரவு சக்திகளால் அழைக்கப்படும் பகுதி) தவிர்ந்த மிகுதிக்குச் சுதந்திரம் வழங்கப் பட்டது. ஐரிஷ் விடுதலைச் சக்திகள் இந்த நிலையை ஒரு நிரந்தரத் தீர்வாக ஏற்க ஆயத்தமாக இருக்கவில்லை. எனவே ஐரிஷ் அரசியலமைப்புச் சட்டம் வடஅயர்லாந்தின் மக்களையும் கருத்திற் கொண்டு அப் பிரதேசத்தின் எதிர்கால விடுதலையையும் உள்ளடக்கியே எழுதப்பட்டது.

வடஅயர்லாந்தில் இருந்த புரொட்டஸ்தாந்து மக்களுக்குத் தெற்கின் கத்தோலிக்க ஆட்சி பற்றிய சில நியாயமான அதிருப்திகள் இருந்தது உண்மை. இவை விவாகரத்து போன்ற விஷயங்களில் கத்தோலிக்கத் திருச்சபையின் இறுக்கமான நிலைப்பாடு தொடர்பானவை. அதேவேளை, வடஅயர்லாந்தின் நிலவுடைமை வர்க்கத்தினரது நலன்கள் வடக்கின் ஆட்சி பிரித்தானியரின்கீழ் இருப்பதையே சார்ந்து இருந்தன. எனவே கத்தோலிக்க - புரட்டஸ்தாந்து வேறுபாடுகள் மேலும் வலியுறுத்தப் பட்டன. பிரிட்டிஷ் ஆட்சிக்கு விசுவாசம் ஊக்குவிக்கப் பட்டது. இதில் பிரிட்டிஷ் ஆளும் வர்க்கத்தின் பங்கு சிறியதல்ல.

நவீன ஜனநாயகத்தின் தாயகமாகத் தன்னைக் காட்டிக்கொள்ள முனையும் பிரித்தானியரது நிர்வாகத்தின் கீழ் வடஅயர்லாந்தின் கத்தோலிக்க மக்கள் இரண்டாம்தரப் பிரஜைகளாக நடத்தப் பட்டனர். பிரித்தானியக் கொலனிகளிற்கூட சர்வஜன வாக்குரிமையைப் புகுத்திய பிரித்தானிய ஆட்சி வடக்கின் சகல நிர்வாக மட்டங்களிலும் ஜனநாயகத்தை வக்கிரப் படுத்தியது. காணி, சொத்து வசதி படைத்தவர்கட்கு மேலதிக வாக்குகள் என்றவாறான பல ஒழுங்கீனமான நடைமுறைகள் 1960கள் வரையும் தொடர்ந்துள்ளன. இத்தகைய நிலைமைகளிலேயே ஐரிஷ் கத்தோலிக்க மக்களது நியாயமான ஜனநாயக, குடிஉரிமைகட்கான இயக்கம் விரிவடைந்தது. இதற்கெதிராக இரண்டு முனைகளில் வடஅயர்லாந்தின் புரொட்டஸ்தாந்து மதவாத பிற்போக்கு சக்திகள் செயற்பட்டன. ஒருபுறம் கத்தோலிக்க விரோதக் குண்டர் படைகளும்

www.tamilarangam.net



மறுபுறம் அவர்களது பொலிசாரும் (இராச அல்ஸ்ற்றர் பொலிஸ் படை அல்லது ஆர்.யூ.சி) கத்தோலிக்க மக்களது அமைதியான போராட்டத்தை நசுக்கின. இதன் விளைவான மோதல் உக்கிரமடைந்ததால் 1968ம் ஆண்டு கத்தோலிக்க மக்களைப் பாதுகாப்பதற்கென்று பிரிட்டிஷ் அரசு தனது ராணுவப் பிரிவை (அல்ஸ்ற்றர் பாதுகாப்புப் படைப்பிரிவு அல்லது யூ.டி.ஆர்.) அங்கு நிலைநிறுத்தியது.

யூ.டி.ஆர். முதலில் கத்தோலிக்க மக்களது பாதுகாப்பிற்காகச் செயல்பட முனைந்தாலும் அதன் அரசியற் தன்மையும் விரைவிலேயே அதனைக் கத்தோலிக்க மக்களுக்கு விரோதமான சக்தியாக்கிவிட்டது. இதன் விளைவாக வெகுஜன இயக்கம் மேலும் வளர்ந்தது. தொடரும் அடக்குமுறையின் சூழலில் ஐரிஷ் விடுதலைச் சேனை என்ற விடுதலைச் சக்தியில் எஞ்சிக் கிடந்த சக்திகள் புத்துயிர் பெற்றன. கத்தோலிக்க விரோத வன்முறைக்கு எதிராக மட்டுமன்றி அதற் காரணகர்த்தாவான பிரிட்டிஷ் அரசிற்கு எதிராகவும் அவர்கள் போராட முற்பட்டனர். மோதல்கள் வடஅயர்லாந்தின் உள்ளே இருந்தவரை பிரித்தானிய அரசாங்கம் அசமந்தமாக இருக்க முடிந்தது. ஐ.ஆர்.ஏ. வன்முறையை பிரித்தானிய மண்ணுக்கும் அதன் தலைநகருக்கும் கொண்டுவந்த பின்னரே பிரித்தானிய ஆட்சியாளர்கள் பிரச்சனைக்குத் தீர்வு அவசியம் என்பதை ஓரளவுக்கேனும் உணர்ந்தனர். ஆயினும் வடஅயர்லாந்து புரொட்டஸ்தாந்து அல்ஸற்றர் தேசியவாதிகளுடன்' தமது நெருக்கத்தை பிரித்தானிய ஆளும் வாக்கம் கைவிட ஆயத்தமாக இல்லை. அவர்கள் நியாயமாக நடக்க ஆயத்தமாக இருந்தாலும் அவர்கள் வளர்த்துவிட்ட அல்ஸ்ற்றர் தேசியவாதிகள்' நியாயமான தீர்வுக்கு ஆயத்தமாக இல்லாததோடு கடுமையான கத்தோலிக்கவிரோத வன்முறையிலும் இறங்கினர்.

பிரித்தானிய அரசாங்கம் இன்று நியாயமான தீர்வுக்கு இணங்கிவந்துள்ளது என்றால் அதற்குப் பலவேறு புறக் காரணங்களும் உண்டு. அதில் முக்கியமான ஒன்று அமெரிக்காவில் (யூ.எஸ்) உள்ள ஐரிஷ் கத்தோலிக்க மக்களது அரசியற் செல்வாக்கு. இவர்களிற் பலர் தென் அயர்லாந்திலிருந்து பிரிட்டிஷ் ஆட்சியின் போதும் பின்னரும் சென்று குடியேறியவர்கள். மற்றொன்று சர்வதேசிய மட்டத்தில், பிரிட்டன் தனது உள்நாட்டுப் பிரச்சனையைத் தீர்க்க முடியாதிருப்பது அதன் செல்வாக்கிற்கு ஏற்படுத்தும் பாதிப்பு. இவற்றினளவுக்கு ஐ.ஆர்.ஏ.யின் தாக்குதல்கள் ஏற்படுத்தியுள்ள பாதுகாப்புப் பிரச்சனையும் முக்கியமானது. பிரித்தானிய அரசாங்கம் ஐ.ஆர்.ஏ.யைக் கையாள்வதிற் செய்த தவறுகள் பிரித்தானிய நீதி, பொலிஸ் போன்ற துறைகளையும் பாதித்துள்ளமையும் நமது கவனத்திற்குரியது.

வடஅயர்லாந்தின் இரண்டு அல்ஸ்ற்றர் தேசியவாதக்' கட்சிகளும் வடக்கின் கத்தோலிக்க மக்களது நியாயமான தீர்வுகட்குத் தடையாகவே இருந்துவந்துள்ளன. இவர்கள் இதற்குமுன்னர் ஏற்பட்ட உடன்படிக்கைகளின் விளைவான தீர்வுகளை நடைமுறைப்படுத்த இயலாது செய்தமை முக்கியமானது. இன்றுங்கூட, ஐரிஷ் அரசு வடக்கின் பிரச்சனைகளின் தீர்வுக்குப் பங்களிப்பதை எதிர்த்தே வருகின்றனர்.

இவர்களைவிட முக்கியமானது இவர்களது அனுசரணையுடன் தென்ஆபிரிக்க நிறவெறியர்களுடனும் நெருங்கிய உறவுடைய புரொட்டஸ்தாந்து குண்டர் படைகள் கத்தோலிக்க மக்கள் மீது கட்டவிழ்த்துள்ள வன்முறை. ஐ.ஆர்.ஏ.யின் வன்முறையும் கொலைகளும் பற்றிப் பேசப்படுமளவுக்கு இவைபற்றிப் பேசப்படுவதில்லை.

இன்று பிரித்தானிய அரசு ஒரு தீர்வை வேண்டுகிறது. அதேவேளை ஐ.ஆர்.ஏயின் ஆயுத நடவடிக்கைகட்குப் பணிந்து தான் செயற்படுவதாக உலகம் கருதுவதை அது விரும்பவில்லை. எனவே ஒருபுறம் ஐ.ஆர்.ஏ.யுடன் பேச்சுவார்த்தைகளும் மறுபுறம் வாய்ச்சவடாலுமாக அது நடந்துகொள்கிறது. ஐரிஷ் அரசாங்கத்துடனான பேச்சுவார்த்தைகள் மூலம் வரும் தீர்வைத் தனது முன்னாட் கூட்டாளிகளான அல்ஸ்ற்றர் தேசியவாதி'களையும் குண்டர் படைகளையும் ஏற்கவைப்பது ஒரு பிரச்சனையாக உள்ளது. அதேவேளை ஐ.ஆர்.ஏ.ஐப் பலவீனப் படுத்தித் தனிமைப்படுத்தும் நோக்கில் கத்தோலிக்க அரசியற் கட்சிகளையும் ஐரிஷ் அரசாங்கத்தையும் தன்னுடன் இணைத்துச் செல்ல முயல்கிறது. அதன் பிரசார யுத்தத்தின் நடுவே ஐ.ஆர்.ஏ.யின் அரசியற் கரமாகக் கருதப்படும் ஷின் ஃபெய்ன் தலைவர் ஜெரி அடம்ஸ் அமெரிக்காவுக்கு விஜயம் செய்ய விசா வழங்கப் பட்டது. இது சர்வதேச ரீதியாக ஐ.ஆர்.ஏ.க்கு ஒரு எழுப்பமாகவும் பிரிட்டனுக்கு

www.tamilarangam.net

முகத்தில் அறையாகவும் காணப்பட்டதாயின் அதற்கு பிரிட்டிஷ் அரசின் நடத்தையும் பங்களித்துள்ளது. ஐ.ஆர்.ஏ.ஐத் தனிமைப்படுத்தவும் அல்ஸ்ற்றர் தேசியவாதிகளைத் திருப்திப் படுத்தவும் விரும்பிய பிரித்தானிய அரசு வட அயர்லாந்தின் பிரச்சனையைத் தீர்க்க நடவடிக்கை எடுப்பதிற் காட்டிவரும் தயக்கமும் தாமதமும் அமெரிக்காவின் ஐரிஷ் வம்சாவழியினரை வென்றெடுக்க உதவவில்லை என்பது ஒரு முக்கியமான உண்மை.

ஐ.ஆர்.ஏ.யோ ஷின் ·பெய்னோ முற்றிலும் ஜனநாயகமான சக்திகளோ முற்போக்குவாதிகளது நிபந்தனையற்ற அங்கீகாரத்திற்கு உரியவர்களோ அல்ல. அவர்களது கண்மூடித் தனமான பயங்கரவாத நடவடிக்கைகள் அவர்களது செல்வாக்கிற்குக் கேடு விளைவித்துள்ளது. ஆயினும் வட அயர்லாந்தின் பிரச்சனையின் காரணகர்த்தாக்கள் அவர்களல்லர். நியாயமான தீர்வுக்குத் தடையாக இருப்பவர்கள் அவர்கள் மட்டுமே என்பதும் உண்மையல்ல. ஆயுதங்களைக் கீழே போடுமுன் நியாயமான தீர்வு பற்றிய கேள்விகளை அவர்கள் எழுப்புகிறார்கள். பிரிட்டிஷ் ஆட்சி ஐரிஷ் மக்களைத் திரும்பத் திரும்ப ஏமாற்றி வந்துள்ளது என்பதுதான் வரலாறு கூறும் பாடம். அவர்கட்கு விளங்கும் மொழி வன்முறையாக மட்டுமே உள்ளபோது, ஐ.ஆர்.ஏ. காட்டும் தயக்கம் தீர்வு பற்றியதல்ல. தீர்வை முன்வைப்போரது யோக்கியதை பற்றியதே என விளங்கும். தீர்வின் ஒரு பகுதியாக பிரிட்டிஷ் படைகள் வடக்கினின்று வெளியேற்றப்பட வேண்டும் என்ற ஐ.ஆர்.ஏ. நிலைப்பாடு முற்றிலும் நியாயமான ஒன்றே.

ஐ.ஆர்.ஏ. சமாதானத் தீர்வை முடிவில் ஏற்கும் என்பது எனது நம்பிக்கை. அப்போது சமாதானத்திற்குத் தடையாக இருக்கப் போவது பிரிட்டிஷ் அதிகார வர்க்கம் வளர்த்தெடுத்த வன்முறைச் சக்திகளாக இருப்பார்கள். அவர்களை பிரிட்டிஷ் அரசு எவ்வாறு கருதும் என்பதும் பிரிட்டனில் வளர்ந்துவரும் பாஸிசப் போக்குகள் எத்தகைய பங்களிக்கும் என்பதும் கவனத்திற்குரியன.

**அனந்தன்**

## மடிய மறுத்த சாதல்

முந்திரிக் காட்டில் குடியிருந்தும்
முதுகு வளைய பாடுபட்டதும்
தேசத் துரோகமா?
யாரையும் காட்டிக்கொடுக்க
அன்னை என்னைப் படைக்கவில்லை.
மக்களுக்காகப் போராடியவர்கள்
வந்த சுவடும் போன சுவடும்
மண்ணில் அழிந்துவிட்டன
அல்லது
எனது சுவடுகளுடன் கலந்துவிட்டன
எந்தச் சுவடு அவன் சுவடு
அடையாளம் காட்டுவது என் வேலையல்ல.
நிலத்தை உழுவது...... விதைப்பது.....
என் விரல் நுனி ரத்தம்
சுத்தச் சிவப்பு....
ஊசியின் நீளத்தை விட
விரல்கள் நீளம்
எவ்வளவு நீள ஊசி கொண்டு வந்தாலும்
இதயத்தை மட்டும் தொட முடியாது
விரல்கள் நீளும்... நீண்டுகொண்டே போகும்
தூக்கம் இல்லாமல் செய்தபோதும்
இமைகள்தாம் மூடாமல் போகும்
இதயக் கதவு திறக்கவே திறக்காது
நிர்வாண உடம்பில்
நெருப்புக் காயங்கள்.....
இறுகிய முகத்தட்டில்
இரத்தக் கோடுகள்....
கிழிந்த உதடுகள் செவிப்பறைகள்....
பிதுங்கும் விழிகள்
பிய்ந்த இமைகள்....
கோர உருவமாய், எனைக்
கொன்று அழித்தாலும்
இதயப் பெட்டகம்
திறக்கவே திறக்காது -
விரும்பித்தானே
சாவியைத் தொலைத்தேன்.

**கனிவண்ணன்**
(தமிழ்நாடு)

www.tamilarangam.net





## கோடையும் கோபமும்

ஒவ்வொரு நாட்டிலும் ஒவ்வொரு விதமாகப் பிரச்சனைகள் வரும். அவை ஒன்றுக்கொன்று எதிரானதாகக்கூட இருக்கும் என்பது கற்பனை பண்ணிப் பார்ப்பது சிரமமானதுதான்.

அதில் ஒன்றுதான் காலநிலை. உதாரணத்திற்குப் பல விடயங்களைக் கூறலாம். இலங்கையில் இருநத்போது நோர்வே போன்ற வடதுருவ நாடுகளில் நடு இராத்திரியிலும் சூரியன் இருக்கும் எண்டு கற்பனை பண்ணவே முடியாமல் இருந்தது. ஆனால் இங்கு வந்தபிறகுதான் புரிகிறது..... அதுபோலப் பல விடயங்கள்.

அதுபோல வானம் பார்த்த பூமி என்று நெடுகச் சொல்றம். அதாவது நெடுக வெயிலும் வெக்கையும் இருக்கிறதாலை மழையை எதிர்பார்த்து அப்பிடிச் சொல்றம். இந்த மாதிரி இங்கயும் வானம் பார்த்த பூமி கதை இருக்கு. நோர்வேயில் ஏழு எட்டு மாதம் குளிரும், பனியுமாக இருக்கு. அதனாலை சனம் வெயில் வராதா எண்டு ஆவலோடை வானத்தைப் பாக்கிற நிலைமை ஒருவகையில எனக்குச் சிரிப்பாய்த் தானிருக்கு.

ஆ.... நான் சொல்ல வந்தது இந்தமுறை நோர்வேயில் 'சமர்' பற்றி. போனவருசம், வலு ஆவலோடை காத்துக் கிடந்து வார 'சமர்' ஒரே மழையும் குளிருமாகிப் போனதிலை பலருக்கு ஏமாத்தமாகப் போச்சு. அதால போன வருசம் 12 மாசமும் கிட்டத்தட்ட ஒரே மாதிரி.... குளிராகவே போச்சு. அதுக்கு முதல் வருசம் நல்ல வெய்யில். உலகம் முழுவதும் மாறிவரும் காலநிலையால அசாதாரண வெயிலும் வெக்கையும் எண்டு எல்லாரும் கதைக்கினம்.

நானும் கற்பனை செய்து பார்ப்பன, உலகம் முழுவதும் காலநிலை மாறி நோர்வேயிலை ஆறு மாதம் குளிரும்

www.tamilarangam.net

ஆறு மாதம் வெயிலும் இருந்தா எவ்வளவு நல்லா இருக்கும் எண்டு. இதுக்குப் பல காரணம் சொல்லலாம். குளிர் தொல்லை இல்லை எண்டதைவிட, ஏழெட்டு உடுப்புப் போட்டு எங்களைச் சிறைவைக்கிற தேவை இல்லை எண்டதோட.... வெளியிலை திரியிற சான்ஸ் அதிகம் எண்டதாலையும்தான். இப்படி என்ர கற்பனை விரிஞ்சு, யாழ்ப்பாணத்திலை ஸ்னோ அடிச்சா எப்படி இருக்கும்? எங்கட வீட்டு முத்தத்திலை குருமணலுக்குப் பதிலா, வெள்ளையா 'ஸ்னோ' இருந்தா எப்பிடி ரசிக்கலாம்?

நாங்க பனிச்சறுக்கி பூட்டி விளையாடிறதும், மாட்டு வண்டிக்குப் பதிலா பனிச்சறுக்கி வண்டியிலை நாய் பூட்டி ஓடுறதும் நல்லாத்தான் இருக்கும். ஓ... இஞ்ச குத்தீட்டி போல பைன் மரத்துக்குப் பதிலா அங்க பனை மரங்கள்தான். பனை சடைச்சு விரிஞ்ச அமைப்புக் கொண்டது. அதாலை அதிலை நிறைய ஸ்னோ தங்கி... முறிஞ்சு முறிஞ்சு விழலாம். அதைவிட எங்கட வீடுகள் 'திறந்த' வீடுகள். ஜன்னல், கதவுகளுக்கால் காத்து வரலாம். குளிர் தாங்கேலாது. பலர் உயிரை விடலாம். ஏற்கனவே நாட்டுப் பிரச்சனையிலை பல சனங்களைப் பலி குடுத்திட்டு நிக்கிறம். என்ர கற்பனையிலும் பலி குடுக்க வேண்டாம் எண்டு என்ர கற்பனையைப் பாதியிலை நிப்பாட்டிப் போட்டன்.

சரி விசயம் இதுதான், இந்தமுறை யூன் கடைசியிலை இருந்து நல்ல வெயில் கொழுத்துது. அதாலையும் பல பிரச்சனைகள், வெயிலுக்குள்ள இடைக்கிடை காணேக்கை நோர்வேஜியர்கள் ஆ...ஊ... எண்டு துள்ளி "ஸ் ஒரே வெக்கையா இருக்கு. கொஞ்சம் மழை வந்தா நல்லம்" எண்டு சொல்லுவினம். வேலைத்தளத்தில் "உனக்குப் பறவாயில்லை. நீ வெயில் நாட்டிலை இருந்து வந்ததாலை உனக்கு இது பிரச்சினையில்லை, கடும் வெயிலையும் தாங்கலாம்.... ஆனால் எங்களாலை..." எண்டு ஒரு இழுவை இழுப்பினம். நானும் விடாம, "இந்த ஒரு மாசத்துக்கே நீங்க இப்பிடி அலுத்தா, இப்பிடி வருசம் முழுவதும் இப்பிடி இருக்கிறதாலை நாங்கள் படுகிற கஷ்டத்தை உங்களாலை கற்பனை பண்ண முடியாது" எண்டு ஒரு மடக்கு மடக்குவன்.

இதைவிட சிலபேர்... "உ(f)பா... எங்கட வீட்டு முற்றத்திலை புல் பூண்டு எல்லாம் காஞ்சு கருகிப் போச்சு. தண்ணி அடிக்கவேணும், இது ஒரு 'எக்ஸ்ட்ரா' வேலை" எண்டு அலுத்துக் கொள்ள நானும் விடாம, "இதுக்கே இப்பிடி எண்டா நாங்க தண்ணி இல்லாத ஊரிலை விவசாயமும் செய்யவேண்டி இருக்கு. மழையையே காண்றது அரிது. எப்பிடி எங்கட வாழ்க்கை கடினமானது" என்பேன்.

இந்தமுறை வெயில் வெக்கையாலை உள்ளுக்குள்ள வேலை செய்யிற சமையல், பாத்திரம் கழுவல்காரருக்குத்தான் பெரிய பிரச்சனை. உள்ள அடுப்பு, மெஷின் வெக்கையும் வெளியாலையிருந்து வாற வெக்கையுமாச் சேர்ந்து வேலை செய்யிறதே கஷ்டம். இதுபற்றி வேலைத்தலங்களுக்குப் பொறுப்பான அமைப்பு ஆயிரக் கணக்கிலை கடிதங்கள் வந்திருக்காம். வேலையிடங்களிலை குறித்த அளவு வெப்பநிலைதான் இருக்க வேணும், அதற்கேற்ப வேலை கொடுக்கிற ஆக்கள் உபகரணங்கள் பூட்டி வெப்பநிலையைச் சீர்படுத்த வேணும் எண்டு சட்டம் உருவாக்கிறது பற்றி ஆலோசிக்கப்பட்டு வருகுது. இப்பிடியொரு சட்டம் இதுவரை இல்லை. இனி வரலாம். இந்த விஷயம் முதல் தடவை நோர்வேயிலை கவனத்திலை எடுக்கப்பட்டிருக்கு. எதிர்காலத்திலை இதுக்கேற்ப நடவடிக்கை எடுக்கப் படலாம். ஆனால் எங்கட நாட்டுக்கு.....?

www.tamilarangam.net



*இராமா இலங்கை இனப்பிரச்சனையை வெறும் உழவர் பிரச்சனையாக மட்டும் தான் (பாட்டாளி வர்க்கப் பிரச்சனையாக) நீ பார்க்கின்றாய் இது எப்படி இருக்கு என்றால் உழவர் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டால் தமிழ் சிங்கள மக்களின் பிரச்சனை முடிவிற்கு கொண்டுவரப்படும் என நம்புவதாகும*

# அப்பளாச்சாரியார்

இராமா நீ கூறிய கருத்துக்களைத்தான் அன்றுமுதல் இன்றுவரை மாக்சிஸவாதிகள், இடதுசாரிகள் எனத் தம்மை கூறிக்கொள்பவர்கள் கூறிவருகின்றார்கள் ஆனால் நடைமுறையில் எதையும் நகர்த்தியதாகத் தெரியவில்லை. நான் இதைப்பற்றி விளக்கமாக எழுதினால் அவர்கள் தவறு செய்துவிட்டார்கள், அவர்கள் உண்மையான மார்க்சிஸ்ட்டுக்கள் இல்லை, ஏன் உண்மையான மாக்ஸிஸ கோட்பாடுகள் இன்னும் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்றெல்லாம் நீ புருடா விடலாம். ஆனால் இராமா மார்க்சிஸ்ட்டுக்கள் தவறு செய்தார்கள் என்று மொட்டையாக கூறுவதைவிட அதற்கான காரணகர்த்தாக்களை விளங்கிக் கொள்ள முயல்வதே யதார்த்தமானது.

இராமா இலங்கை இனப்பிரச்சனையை வெறும் உழவர் பிரச்சனையாக மட்டும் தான் (பாட்டாளி வர்க்கப் பிரச்சனையாக) நீ பார்க்கின்றாய் இது எப்படி இருக்கு என்றால் உழவர் பிரச்சனைக்குத் தீர்வு காணப்பட்டால் தமிழ் சிங்கள மக்களின் பிரச்சனை முடிவிற்கு கொண்டுவரப்படும் என நம்புவதாகும், அதாவது தமிழ் சிங்கள மக்களின் முரண்பாட்டை வெறும் வர்க்க பிரச்சனையாக மட்டும் பார்ப்பதாகும். கடந்த அரை நூற்றாண்டு உலக வரலாறு எமக்கு எதைப் புலப்படுத்துகின்றது. தேசிய இனங்களிற்கிடையிலான முரண்பாட்டை வெறும் வர்க்கப் பிரச்சனையாக கருதி செயற்பட்ட சோவியத் மற்றும் கிழக்ஐரோப்பிய நாடுகளின் இன்றைய வரலாறு எமக்கு எதைப்புலப்படுத்துகின்றது.

ரோம் நகர் எரியும் போது நீரோ மன்னன் பிடில் வாசித்தானாம் அதுபோல் தான் உள்ளது இடைக்காலத் தீர்வு பற்றி நீ கூறியுள்ள கருத்துக்கள். இலங்கை அரசின் நரபலி வேட்டை மும்முரமாக நடந்து கொண்டிருக்கிறது, மக்கள் வாழ்வா சாவா என இரத்தமும் சதையுமாக தினமும் போராடி வருகின்றனர்எமது பிரதேசத்தின் இயற்கை வளங்கள் அனைத்தும் சுடுகாடாக்கப்பட்டு வருகின்றது கிழக்கு மாகாணம் சிங்களக் குடியேற்றத்தால் சிங்கள பௌத்தமயமாகி வருகின்றது. இந்நிலையில் இதற்கு என்ன தீர்வு என ஆராயும் போது, நீயோ மார்க்சிஸ சித்தாந்தக் கோட்பாடுகளை மட்டுமே உயர்த்தி பிடிக்கின்றாய் இராமா எமதுமக்களிற்கு இன்று தேவை சுகமான எதிர்கால வாழ்வு பற்றிய கற்னையல்ல. விரக்தியின் விளிம்பில் இருக்கும் அவர்களிற்கு தற்காலிக இடைவேளையாவது தேவைப்படுகின்றது.



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

இடைக்காலத் தீர்வுபற்றி கதைத்ததால் நீயோ சமூக மாற்றத்தைப் பற்றி கதைக்கின்றாய். சமூக மாற்றத்தின் தேவையை நான் மறுக்கவில்லை ஆனால் இன்றைய எமது நிலையோ சமூக மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியளவிற்கு எமது போராட்டத்தை இம்மியளவும் நகர்த்தக் கூடிய சூழ்நிலை இல்லை. தவிரவும் சமூக மாற்றம் ஏற்படவேண்டுமானாலும் கூட ஒரு தற்காலிக அமைதி சூழ்நிலை தோன்றுவது அவசியமே. இன்றுள்ள சூழ்நிலை அப்படியே தொடருமாயின் எமது போராட்டம் பின்தள்ளப்படக் கூடிய நிலைமையே நிலவுகின்றது. இதைப் புலிகளும் நன்கு உணர்ந்துள்ளனர் என்றே கருதுகின்றேன். இதனாலேயே ஒரு இடைக்கால தீர்வுபற்றி தாங்கள் பரிசீலிக்கத் தயார் என பகீரங்கமாக அறிவித்துள்ளனர்.

எமது தேசிய விடுதலைப் போராட்டம் இன்று பெருமளவிற்கு பின்தள்ளப்பட்டுள்ளமைக்கு தனித்துப் புலிகளை மாத்திரம் குற்றம் கூறுவது உண்மையை மூடிமறைப்பதாகும். ஆரம்பத்திலிருந்தே செயலாற்றி வந்த பாராளுமன்ற தலைமைகளில் இருந்து ஆயுதம் ஏந்திய பல ஆயுதக்குழுக்களிற்கும் இதில் பொறுப்புண்டு. ஆனால் புலிகளை மாத்திரம் ஒரு பக்க சார்பான கண்ணோட்டத்துடன் விமர்சிப்பதை சில புத்திஜீவிகள் நாகரீகமாகக் கருதிவருகின்றனர். புலிகள் ராஜினியைக் கொலை செய்தனர், முஸ்லீம்களை வெளியேற்றினர், ஏனைய இயக்க அங்கத்தவர்களைக் கொலை செய்தனர். ஆகவே புலிகள் தேசிய விடுதலைக்கு எதிரானவர்கள் என ஒட்டு மொத்தமாக நிராகரிக்கும் தன்மை கொண்டவர்களாக இவர்களுள்ளனர்.

இராமா புலிகள் தரகு முதலாளிதத்துவ வாதிகள் என ஒரேயடியாக நீ ஒதுக்கி விடுகின்றாய். புலிகள் தரகு முதலாளித்துவவாதிகளா தேசிய முதலாளித்துவவாதிகளா என்பது பற்றிய விவாதத்தை தற்போது நடாத்த நான் விரும்பவில்லை ஆனால் எமது தேசிய விடுதலைப் போராட்டத்தில் புலிகளைத் தவிர்த்து/முற்றாக நிராகரித்து காணப்படும் தீர்வுகள் எதுவும் நிரந்தர தீர்வாக அமையப்போவதில்லை.

இராமா ஒரு இனத்தின் தே.வி போராட்டத்தில் போராடும் போராளிகளையும் அவர்களின் தலைமையையும் ஒரே நேர்கோட்டில் வைத்துப் பார்ப்பது நியாயமற்றது. புலித் தலைமைகளின் கடந்தகால அரசியல்த் தவறுகள், இராணுவ பயங்கரவாதங்கள் எமது போராட்த்தை பின்தள்ளியுள்ளது என்பது எவ்வளவு உண்மையோ அதேபோல் புலிப்போராளிகளின் உறுதியான எதிர்ப்போராட்டமும் தான் சிறீலங்கா அரச நிர்வாகத்தை நிலைகுலைய வைத்துள்ளதுடன் தமிழ் மக்களுக்கு பிரச்சனைகளுண்டு என்பதையும் சர்வதேசமயப்படுத்தியுள்ளது. இராமா போராட்டத்தலைமைகளின் தவறுக்கு ஒத்துப்போகும் போராளிகள் உண்மையில் தேசவிடுதலையில் நாட்டம் கொண்ட போராளிகளாக இருக்க முடியாது என நீ கூறலாம். ஆனால் நடைமுறையில் இது எவ்வளவு தூரம் சாத்தியம் என்பது உனக்கே தெரியும்.

மேலும் புற்றீசல்கள் போல் வந்து கொண்டிருந்த பல தரப்பட்ட இயக்கங்கள் மத்தியில் புலிகள் மட்டுமே இன்று சிறீலங்கா அரசிற் கெதிரான போராட்டத்தை நடாத்திக் கொண்டிருக்கின்றனர். புலிகளின் இந்நிலை அவர்களின் கடந்தகாலத் தவறான வழிமுறைகளை நியாயப்படுத்தப் போவதில்லையாயினும் தமிழ் மக்களிற்கு குறைந்த பட்சத் தீர்வாயினும் கிடைக்க வேண்டும் என்பதில் உறுதியாயிருக்கின்றனர். இன்றைய நிலையில் அரசியல் ரீதியாகவோ இராணுவ ரீதியாகவோ கூடப் புலிகள் பலமிழப்பது தமிழ் மக்களிற்கு மிகப் பெரிய தீமைவிளைவிப்பதாகவே அமையும். இதைத் தமிழ் மக்களும் நன்குணர்ந்துள்ளனர் என்றே கருதுகின்றேன். குறிப்பாகயாழ்க்குடா நாட்டில்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net



புலிகள் எத்தகைய இராணுவ நடவடிக்கையை மேற்கொண்டாலும் பொதுமக்கள் அணிதிரண்டு வந்து ஒத்துழைக்கின்றனர். ஆனையிறவு இராணுவ முகாம் தாக்கப்பட்ட போது பலியான 600 க்கும் மேற்பட்ட போராளிகளின் உடல் அவயவங்களை பொருத்துவதிலிருந்து இறந்த உடல்களைப் பக்குவப்படுத்து வரை வயது வேறுபாடின்றி 14-60 வயதுவரையுள்ள ஆண் பெண் இருபாலாரும் பங்குபற்றியதுடன் இற்றைவரை பொதுமக்கள் முடிந்தளவு தமது ஒத்துழைப்பை வழங்கியே வருகின்றனர்.

இராமா சயனைட் அருந்தி உயிர்துறப்பதையோ கரும்புலியில் சேர்ந்து ஒரு போராளி உயிர் துறப்பதையோ நான் நியாயப்படுத்தவில்லை. ஆனால் தனது நாட்டின் தேசியவிடுதலைக்காக, தான் நேசிக்கும் மக்களின் விடுதலைக்காக தனது சுய ஆசாபாசங்களையெல்லாம் கடந்து உயிர் துறக்கும் ஒரு போராளியை வெளிநாடுகளில் கோழிக்காலை சுவைத்துக் கொண்டு "கோழை□□ என விமர்சிக்கும் எம்மவர்களின் விமர்சனத்தை எதில் சேர்ப்பது. ஒரு போராளி உயிர் வாழ்வதிலுள்ள சாதகமான அம்சங்களை கருத்திற்கொள்ளும் அதே சமயம் அவனது தியாகத்தையும் இனத்தின் விடுதலையில் அவன் கொண்டுள்ள நேசத்தையும் கருத்திற்கொள்ள வேண்டும். இராமா நான் இப்படி எழுதுவதால் புலிகளிற்கு வக்காலத்து வாங்குவதாகவோ அவர்களின் ஜனநாயகமறுப்பு செயற்பாடுகளை ஆதரிப்பதாகவோ கருதவேண்டாம். ஒரு பரந்துபட்ட தேசிய விடுதலைப் போராட்டத்தில் ஏற்படும் தவறுகளை சரியான விமர்சனம் கருத்துப்பரிமாற்றம் மூலமே திருத்திக் கொள்ளலாம். இதில் மற்றவர்களைவிட புலிகள் அமைப்பிற்கே தார்மீகப் பொறுப்புண்டு. இற்றைவரை இதற்கான கதவுகளை புலிகள் திறக்கவில்லை என்பது கசப்பான உண்மையேயாயினும் புலிகள் தொடர்பான

**தமிழ் சிங்கள மக்களின் முரண்பாட்டை வெறும் வர்க்க பிரச்சனையாக மட்டும் பார்ப்பதாகும் கடந்த அரைநூற்றாண்டு உலக வரலாறு எமக்கு எதைப் புலப்படுத்துகின்றது. தேசிய இனங்களிற்கிடையிலான முரண்பாட்டை வெறும் வர்க்கப் பிரச்சனையாக கருதி செயற்பட்ட சோவியத் மற்றும் கிழக்ஐரோப்பிய நாடுகளின் இன்றைய வரலாறு எமக்கு எதைப்புலப்படுத்துகின்றது.**

விமர்சனமும் முழுமையான தேசிய விடுதலை கண்ணோட்டத்தில் வைக்கப்படுவதில்லை என்பதும் மறுக்கமுடியாத உண்மையே. தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை நசுக்குவதே தனது முதற்பணியாகச் செயலாற்றி வரும் சிறீலங்கா அரசின் பாசிசத் தன்மைகளை கண்டிப்பதை விட புலிகளின் செயற்பாடுகளை "ஒரு பக்க கண்ணோட்டத்துடன்□□ விமர்சிக்கும் போக்கானது நிச்சயம் தமிழ் மக்களின் தேசிய விடுதலைப் போராட்டத்தை பாதிக்கவே செய்யும். புலிகளின் ஜனநாயக மறுப்புக்களையும் அரசியல் இராணுவ ஒடுக்கு முறைகளிற்கு எதிராக குரல் கொடுக்க வேண்டியது எவ்வளவு நியாயமோ அதைவிடப் பல மடங்கு முக்கியமானது தமிழ் மக்களின் முக்கிய எதிரியான சிறீலங்கா பாசிச இனவெறி அரசிற்கெதிராக குரல் கொடுப்பதாகும்.

இராமா எனது கருத்துக்களோடு நீ எவ்வளவு தூரம் உடன்படுகிறாயோ தெரியாது எனினும் காலம் தாமதியாது உனது கருத்துக்களையும் எழுது.

இப்படிக்கு
அப்பளாச்சாரியார்



தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

# மலையக பாரம்பரிய கலை வடிவங்கள்

இலங்கையும் இந்தியாவும் வெகு நெருக்கமான உறவுகளைக் கொண்ட அண்டை நாடுகள். இதனால் இலங்கையின்அரசியல் பொருளாதார கலை இலக்கிய முயற்சிகளில் இந்திய செல்வாக்கு இருப்பது தவிர்க்க முடியாததே. இலங்கையின் தமிழ், சிங்கள ஆங்கில இலக்கியங்கள் மூன்றிலும் இச்செல்வாக்கை கண்டு கொள்ள முடியும். இச்செல்வாக்கு இந்தியாவிலிருந்து புலம் பெயர்ந்து வந்த இந்திய வம்சாவளியினரின் இலக்கிய முயற்சிகளில் எவ்விதம் பாதித்துள்ளது, எத்தகைய வளர்ச்சிக்கு அடிக்கோலியது என்பதை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

இலங்கையும் இந்தியாவும் பிரித்தானிய குடியேற்ற நாடுகளாக இருந்த காலம் வரை இந்தியாவின் செல்வாக்கு இலங்கையில் அதிகமாயிருந்தது.

இலங்கையின் வடபகுதியான யாழ்ப்பாணம் தமிழர் செறிந்து வாழும் பிரதேசம். இந்தியாவின் தென்கோடியில் செறிந்து வாழ்ந்த தமிழர்கள் இவர்களுக்கிடையில் கடல் பிரிந்தாலும் அண்மையில் வாழ்ந்த அண்டை,

அறுத்துக்கொள்ளாமல், அத்தொடர்பை குடியேறிய புதிய இடத்தில் தங்களின் புதிய முயற்சிகளுக்கு உதவுகிற விதத்தில் பயன்படுத்திக் கொண்டார்கள். இதுவே இவர்களின் முதற் பங்களிப்பாகும்.

இந்திய வம்சாவளியினரான மலையக மக்கள் இலங்கையில் 200ஆண்டுகளுக்கு மேலாக வாழ்கின்றனர். 1824-ம் ஆண்டு 16 குடும்பங்களின் வருகையோடு இவர்களின் குடியேற்றம் இலங்கையில் ஆரம்பமானது. இவர்களின் ஆரம்பகால இலக்கிய வெளிப்பாடுகள் வாய்மொழி இலக்கியமாகவே அமைந்தன.

இந்திய வம்சாவளியினர் இங்கு புலம் பெயர்ந்து வந்தபொழுது தங்களின் பாரம்பரிய கலைவடிவங்களையும் தங்களோடு கொண்டே வந்தனர். தேயிலைக்கு முன்னர் கோப்பிக் காலத்தில் கூட "கும்மியோ கும்மி கோப்பிக்காட்டு கும்மி" என்பது இவர்கள் வளர்த்த கலையாகும். இவர்கள் மத்தியில் வேர்க்கொண்டு தழைத்த கலைகளை முதலில் பார்ப்போம். கும்மி, கோலாட்டம்,ஒயிலாட்டம், கரக்கலை, காவடி ஆட்டம்,, பொன்னர் சங்கர்

தோட்டங்களில் ஆலய திருவிழாக்களின் போதும் பொது நிகழ்ச்சிகளிலும் வைபவங்களிலும் பெண்கள் கும்மியடித்து மகிழ்வார்கள்.

தன்னனனாதினம் தன்னானே—தன
தன்னனனாதினம் தன்னானே
தன்னனனானே என்று தான்
சொல்லுங்களேன்.
உங்க நாவுக்கு சர்க்கரை நான்
தாரேன்
தன்னனாதினம் தன்னானே.
தேங்காய் உடைக்கவே தண்ணி
சிதறவே
தெப்பங்குளம் எல்லாம் தத்தளிக்க
மருத மீனாட்சி மாயவன் தங்கச்சி
எப்ப வருவாளாம் தெப்பம் பார்க்க
மருத வந்தாலும் தேரோடாதாம் —
அந்த
மருத மீனாட்சி........மாயவன் தங்கச்சி

தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

www.tamilarangam.net

நாட்டவராவார். எனவேதான் இந்தியாவைத் தாயகமாகக் கருதும் பழக்கம் சமீப காலம் வரை இலங்கையிலிருந்தது.

கலாயோகி ஆனந்தகுமார சுவாமி போன்றவர்கள் ஐரோப்பிய நாடுகளைவிட இந்தியாவுடனே இலங்கைத் தனது தொடர்பை அதிகரித்துக்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தினர்.இலங்கைச் சமூக சீர்திருத்த சபையின் 1907 -ம் ஆண்டு கூட்டத் தலைமையுரையில் இதனை வெளிப்படுத்தி இருந்தார்.

இந்தியாவின் தென்கோடித் தமிழர்கள் பெருந்தோட்ட முயற்சிகளில் ஈடுபடுவதற்காக இங்கு அழைத்து வரப்பட்டு ஏராளமாக இலங்கையின் மத்திய மலைநாட்டில் குடியமர்த்தப்பட்டார்கள். இவர்களை மலையக மக்கள் என்றும் குறிஞ்சி நில மக்கள் என்றும் இன்றும் இனம் காட்டப்படுகிறார்கள். இவர்களைப் பற்றியதும், இம்மக்களிடையே தோன்றிய இலக்கியப் படைப்பாளிகளின் ஆக்கங்களும் "மலையக இலக்கியம்" என்று குறிப்பிடப்படுகிறது. இவ்விதம் வரையறுத்துக் குறிப்பிடுவதும் இலங்கை தமிழ் இலக்கியமே.

இந்திய மண்ணில் வாழ்ந்து பழகிய இம்மக்களை இலங்கையில் குடியேறிய பின்னர் சூழ் நிலை மாற்றத்துக்கு ஏற்ப புதிய புதிய அனுபவங்களைப் பெற்றார்கள். இந்திய மண்ணின் தொடர்பை முற்றாக

கதை, அர்ச்சுணன் தபசு, காமன் கலை, தப்பு இசை, போன்ற பலவாகும்.

## அந்தனி ஜீவா

மலையக மக்களின் பாரம்பரிய கலைகளில் ஒன்றுதான் தப்பு. நமது தப்பு கருவியை 18 வகையாக அடிக்கலாம். காலைத்தப்பு, பிறட்டு தப்பு, திருமணத்தப்பு, சடங்கு தப்பு, சாவுத்தப்பு, இப்படி பல விதமான குறியீடுகளாக தப்பின் ஒலியின் மூலம் உணரலாம்.

இதே போன்று காவடி ஆட்டம், கரகாட்டம், திருவிழா, உற்சவங்களுக்கு தப்பு கருவியினை பயன்படுத்துவார்கள் மற்றும் காமன் கூத்து, அர்ச்சுணன் தபசு, பொன்னர் சங்கர் கதை, ஆகியவற்றிற்கு தப்பு கருவியை பயன்படுத்துவார்கள். இன்னொரு முக்கியமான இசைக்கருவி உடுக்கு. காவடி ஆட்டம், கரகாட்டம், பேயாட்டம் போன்றவற்றிற்கு உடுக்கே நாயகனாக திகழும்.

இதுபோன்று பாரம்பரிய கருவிகளான உறுமி மேளம், தமூர், செஞ்சனக்கட்டை சங்கு, தண்டை போன்ற கருவிகள் உபயோகிக்கப்படும். இன்னும் கூட நம்மிடையே கும்மி, கோலாட்டம், காவடி என்பன. இவைகள் தோட்ட மக்களின் வாழ்வோடு இரண்டறக்கலந்து விட்ட பாரம்பரிய கலைகளாகும்.

வந்து வடம் தொட்டால்
தேரோடுமாம் .

தன்னன்னாதினம் தன்னானே
சின்னக்குளத்திலே நீராடி —அந்த
சிங்காரத் தோப்பிலே வேட்டையாடி
வீட்டுக்கு வாராம் வெள்ளிரதமேறி
வீரக்கணைக் கொண்டு வீசுங்கடி
தன்னன்னா தினம் தன்னானே.

இத்தகைய பாடல்களை பாடி பெண்கள் கும்மியடித்து மகிழ்வார்கள். இன்று நம்மிடையே காணப்படும் கூத்துக்கள் காமன் கூத்து, பொன்னர் சங்கர் கதை, அர்சுணன் தபசு. அதனால் நம்மக்களிடையே ஆண்டுதோறும் அதி சிறப்பாக ஆடப்படுவது காமன் கூத்தாகும். மலையக தோட்டங்களில் பக்தியுடன் கொண்டாடப்படுவது காமன் கூத்தாகும்.

மலையக பாரம்பரிய கலைகளில் என்றும் எம்முடன் நின்று நிலவி வருவது மலையக வாய்மொழிப் பாடலாகும்.இதனை நாட்டார் பாடல் நாட்டார் இலக்கியம் என்று நம்மவர்கள் சிலர் இதனை தோட்டப்புற இலக்கியம் என சிறப்பாக குறிப்பிடுவார்கள்.

ஏட்டில் எழுதாத இதயத்து

www.tamilarangam.net

ராகங்களான வாய்மொழிப் பாடல்களின் மூலமே இந்த மக்களின் வரலாற்றை அறிந்து கொள்ள முடியும் கிராமியப் பாடல்கள், நாட்டார் பாடல்கள், நாடோடிப்பாடல்கள், தோட்டப் பாடல்கள், கதைப்பாடல்கள், தெம்மாங்குப் பாடல்கள், என்றெல்லாம் இவ்வாய்மொழி இலக்கியம் வகுக்கப்பட்டும் தொகுக்கப் பட்டும் உள்ளது.

இலங்கையில் ஏனைய பிராந்திய வாய்மொழி இலக்கியம் அம்மக்களின் சமூக வாழ்க்கை முறைகளையும் பழக்க வழக்கங்களையும் வெளிப்படுத்தி அமைகின்றப் போது, இந்த மலையக மக்களின் வாய்மொழிப் பாடல்கள் அம்மக்களின் வரலாற்றில் பல நெளிவு சுளிவுகளை வெளிப்படுத்தி இருக்கின்றதை கண்டு கொள்ளலாம். இது இலங்கை இலக்கியத்திற்கு இந்த மக்களின் இன்னொரு பங்களிப்பாகும்.

இந்த வாய்மொழிப்பாடல்கள் இவர்களின் துன்ப துயரங்கள், சோகப்பெருமூச்சுக்கள், இன்பங்கள், ஆசாபாசங்களையும் கண்டுக் கொள்ளலாம். மலையக வாய்மொழிப் பாடல்களில் தாலாட்டு எனத்தொடங்கி காதல், ஒப்பாரி, கும்மி, என்று விரியும் இந்த பாடல்களுக்கு ஆதாரமாய் நிற்பது தமிழ் நாட்டின் பண்டைய கிராமிய கலாச்சாரம் தான்.

இவ்வாறு கோப்பிப் பழம் பறிக்கையில் கங்காணி காட்டு மேலே

கண்டாக்கையா ரோட்டு மேலே
பொடியன் பழமெடுக்க
பொல்லாப்பு நேர்ந்ததையா.....

என வேதனைப்படுகிறார்.

இனி தேயிலைக்காலத்துக்கு வருவோம்.

கொழுந்து வளர்ந்திருச்சு
கூடபோட நாளாச்சு
சேந்து நெரே புடிச்சு
சிட்டா பறக்குறாளே.

தேயிலை கொழுந்து வளர்ந்ததைப் பார்த்து மனம் பூரித்து பாடுகிறாள்.

மலையக தேயிலை தோட்டங் களில் கங்காணிமார்களின் காட்டுத்தார்பார்களை அட்டகாசங்களை பின்வரும் பாடல் மூலம் உணரலாம்

எண்ணி குழி வெட்டி
இடுபொடிஞ்சி நிக்கையிலே
வெட்டு வெட்டு என்கிறானே
வேலையத்த கங்காணி.

என்று தன் வேதனையை

என் புருஷன் கங்காணி
என் கொழுந்தன் கவ்வாத்து
எளைய கொழுந்தனுமே
இஸ்டோரு மேல் கணக்கு

இந்த பாடலைக் கேட்டுக் கொண்டிருந்த அவளின் மாமன் மகள் பாடுகிறாள்

கல்லுருக கடலுருக
கண்டார் மனமுருக
நானும் சடங்காகி
நாப்பத்தொரு நாளாச்சு
நானும் சடங்காகி
நாப்பத்தொரு நாளாச்சு
ஏனின்னு கேக்கலையே
ஏறிட்டு முகம் பார்க்கலையே

என மன உணர்வை வெளிப் படுத்துகிறாள் .இதே போன்று மலையகத்து தோட்டப்புற சிறுவர்கள் பாடும் பாடல் இது

'சிக்கு புக்கு
நீலகிரி தொப்பிதோட்டம்
நாங்க வந்த
கப்பலிலே மிச்ச கூட்டம்"
நீலகிரி என்பது நானுஒயாவையும்

அவர்கள் அங்கிருந்து வரும் போது

"வாடையடிக்குதடி
வாடக்காத்து வீசுதடி
சென்னல் மணக்குதடி
சேர்ந்து வந்த கப்பலிலே

என்று கப்பலில் வந்த சோகக் கதை பாடலில் புலம்புகிறான்.

கண்டிச்சீமைக்கு வந்த பின் பாடுகிறான்

"ஊரான ஊரிழந்தேன்
ஒத்தப்பனை தோப்பிழந்தேன்
பேரான கண்டியிலே
பெத்த தாயே நாமறந்தேன்.

என்ற பாடலை பாடுபவனின் அநாதரவான வஞ்சிக்கப்பட்ட நிலையைக் காட்டுவதாக அமைகிறது.இதேப்போன்று தேயிலைக்கு முன் கோப்பி பயிர்ச்செய்கையின் போது ஒரு பாடல்

கோணக் கோண மலையேறி

கோப்பிப்பழம் பறிக்கையிலே

ஒரு பழம் தப்பிச்சின்னு
ஒதைச்சானையா சின்னதொரை

வெளிப்படுத்துகிறான்.இதோ இன்னொரு பாடல்

அந்தான தோட்டமுனு
ஆசையா தானிருந்தேன்
ஒர ரூட்ட தூக்கச் சொல்லி
ஒதைக்கிறாரே கண்டாக்கையா

மலையக வாய்மொழிப் பாடல்களிலே துன்ப துயரங்களை சோகப் பெருமூச்சுகளையும் பலரும் எடுத்துக்காட்டியுள்ளார்கள். அவர்களிடையே இன்பத்துன் பங்களும் காதல் பாடல்களும் இருந்ததற்கு பல பாடல்கள் சான்றாக உள்ளன.

இதோ மலையகத்தின் பிரபலமான ஒரு பாடல்

கூட மேலே கூடவச்சி
கொழுந்தெடுக்க போறப்புள்ளே
கூட ஏறக்கி வச்சு

குளுந்த வார்த்தை சொல்லிப்போடி

என்று தன் உள்ளக்கிடங்கையை வெளிப்படுத்துகிறான். அவளோ தான் திருமணமானவள் என்பதை இவ்வாறு வாய்மொழிப் பாடலாக வெளிப்படுத்துகிறாள்.

தொப்பி தோட்டம் என்பது அட்டனையும் குறிக்கும் தமிழ்ப்பெயர்கள். மலையகத்தில் வழங்கி வரும் வாய்மொழிப் பாடல்களில் இது போன்ற வரலாற்று உண்மைகள் மறைந்து கிடக்கின்றன.

இத்தகைய வாய்மொழிப் பாடல்களை அழிந்துவிடாமல் பாதுகாக்க வேண்டியது நமது கடமையாகும். இன்று நவீன வசதிகளுமுண்டு. அதனால் 'ஒடியோ' வில் பதிவு செய்து இந்தப்பாடல்கள் பாதுகாக்கப்பட வேண்டும். மலையக வாய்மொழிப்பாடல்கள் மலையக மக்களின் வரலாற்று ஆவணமாகும்.

அமெரிக்க வாழ் கறுப்பின மக்களைப் பற்றி ஆய்வுகள் நடத்தியவர்கள் கூட அந்தமக்களின் தோட்ட வாழ்க்கை அடிமை முறை சரித்திரச் சம்பவங்கள் என்று கவனம் காட்டிய அளவுக்கு அவர்களிடமே உயிர் வாழ்ந்த வாய்மொழிப்பாடல்களைப் பற்றி அக்கறை கொள்ளவில்லை என்ற குறைப்பாடுண்டு. அதனால் பாரம்பரிய கலைவடிவங்களை பாதுகாப்பதும் நமது கடமையாகும்.

*[கண்டிப்பிரதேச தமிழ் சாகித்திய விழாவில் பேராசியர் எஸ். தில்லைநாதன் தலைமையில் 20.7.93. ல் நடைபெற்ற மலையக பண்பாட்டியல் ஆய்வரங்கில்அந்தனிஜீவா நிகழ்த்திய உரையே இங்கு இடம்பெற்றுள்ளது.]*



www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

க.ஆதவன்

# மண் மணம்

## அத்தியாயம் 6



சூத்திரக் கிணறு!.

சூத்திரக் கிணறு என்று ஏன் பேர் வந்திருக்கும்? இரண்டு மாடுகளைப் பூட்டி..... அது சுத்திச் சுத்தி வரும். அந்த மாடுகள் ஒரு நீண்ட சங்கிலியை இழுத்து வருங்கள். அந்தச் சங்கிலி கப்பிகளினூடே பிணைக்கப்பட்டு.... பெரிய வாளிகளை ஆழமான கிணற்றிலிருந்து இழுக்கும். வாளிகள் தண்ணீரைக் கோலி அள்ளும். தண்ணீர் தன்பாட்டில் வாய்க்காலில் இறைக்கப்படும். இப்படியே மாடுகள் சுத்திச் சுத்திவர தண்ணீர் பயிர்களுக்குப் பாயும். அந்த வாளிகளுக்குக்கூட 'சூத்திரவாளி' எண்டுதான் பெயர். சுத்திச் சுத்தி வருதாலே என்னவோ சூத்திரக் கிணறு என்று பெயர் வைத்திருக்கிறார்கள். சூத்திரக் கிணறுகள் பெரும்பாலும் செம்பாட்டுத் தரையில்தான் இருக்கும். ஏனெண்டா செம்மண் தரையிலை கிணறுகள் ஆழம். துலாமிதிக்கலாந்

www.tamilarangam.net
தமிழ்த் தேசிய ஆவணச் சுவடிகள்

தானே எண்டு கேப்பியள். துலா மிதிக்கிறதுக்கு மூண்டுபேர் வேணும். மூண்டாள் கூலியையும் ஆயிரங்கண்டு வெங்காயத்தையும் நினைச்சுப் பாருங்கோ. கூலி குடுத்துக் கட்டாது. ஒரு நாள் மூண்டுபேர் துலாமிதிச்சால் நாலு வாய்க்கால்தான் பாயும். நாலு வாய்க்கால் எண்டுறது எங்கட ஊர்க் கணக்குப்படி கிட்டத்தட்ட 200 கண்டுக்குக் காணும். அப்ப அஞ்சு நாள் வேலை. சூத்திரக் கிணறு எண்டால்.... நல்ல மாடுகள் எண்டால்.... அதுகள் ஒரு நாளிலை 500 கண்டுக்குச் சுத்தி வருங்கள். அதோடை கூலிக்காரருக்குச் சாப்பாடு.... பராமரிப்பு எண்டு காசு வேணும். ஆனால் மாடுகளுக்குத் தவிடு புண்ணாக்கு வைக்கோல் இதுகளோடை சரிக்கட்டிப் போடலாம். மாடுகள் களைச்சுப் போனா பக்கத்திலை ஆரிட்டையன் ரெண்டு இரவல் மாட்டைப் பூட்டிச் சுத்திவிடலாம். சூத்திரக் கிணறு எப்பிடிப் பாத்தாலும் லாபந்தான்.

ரகுநாதன் எட்டாம் வகுப்புப் படிக்கேக்கை அவனுக்கு ஒரு சினேகிதன் இருந்தான். அவன்ரை பெயர் 'பொன்னப்பு'. ஏன் அவனைப் பொன்னப்பு என்று கோயிலடிப் பெடியங்கள் கூப்பிட்டாங்கள் எண்டால், தகப்பன்ரை வேறையும் ஆரோ அந்த நேரத்திலை comment அடிச்சவை. ஒண்டும் ஞாபகத்திலை வருகுதில்லை.

நினைவு வாறது பெரிய கஷ்ரமாயிருக்கு.... இப்ப...!.

வந்தாலும் அது பொய்யான நினைவோ எண்டு சந்தேகம் வருகுது. சிலநேரம் சாத்திரிமார் சொல்லுறது மாதிரி,

"தம்பி, கவனமாய் இரும்.

இப்பதான் திரும்பப் போகுது. திரும்பிச்சுதோ துலைஞ்சீர். அதுக்கு முதல் தப்பப் பாரும். இந்த இடத்திலைதான் தத்து! தத்துக் கழிஞ்சுதோ....?

பிறகு உம்மைப் பிடிக்கேலாது"

சூத்திர ஆசனமும் திரும்பிச்சுது.

ரகுநாதனுக்கு அந்த நேரம் எல்லா இடமும் கண்கள்தான்.

திரும்பிய வளைவில் வாழைத் தோட்டத்துக்கிடையில் - கந்தியின்ரை இரண்டாவது மோள்.

மின்னும் வெட்டாய்... மின்னிக் கொண்டு இருந்தாள்.

"சாதியிலை குசைஞ்சாக்களுக்கு அப்பிடியொரு மார்பகம் இருக்கும்" எண்டு மகேந்திரண்ணை முந்திச் சொன்னதை ஒருக்கா ரகு நினைச்சுப் பார்த்தான்.

அப்படித்தான் தெரிந்தது.

இதென்னடாப்பா பெரிய கரைச்சலாக் ஏன்..... ஏன்..... இயங்கட்டும் என்று விட்டுப் பிடிக்குதுகள்?

என்னைப பழிவாங்கவா? அல்லது தங்கள் பசிதீர்க்கவா?

பழியும் பசியும்.......

பசியும் பழியும்.......

கந்தியின் ரண்டாவது மோளுக்கு அந்த வயதில்..... அந்த நேரத்தில்....... இது தெரிந்திருக்கக் கூடுமா?

வேர்க்க விறுவிறுக்க ரகுநாதன் ஓடிவந்து சூத்திர ஆசனத்தில் அமர்ந்துகொண்டான்.

வாழைச் சருகுகளுக்கிடையே அந்த இன்பம் கொடுத்தவள் மறைந்து விட்டிகூக்கக்கூடும்.

மாகுகளுக்கென்ன?

சுத்திச் சுத்தி வரவேண்டியதுதான்.

மனிசனுக்கென்ன?

மாடுகளைச் சுற்றப் பண்ணவேண்டியதுதான்.

பொன்னப்புவுக்கென்ன?

சொன்னபடி செய்யவேண்டியது.

கந்திக்கென்ன?

வெங்காயம் கிண்டவேண்டியது.

ரண்டாவது மோளுக்கென்ன?

வயது வந்துவிட்டது.

ரகுநாதனுக்கென்ன?

வேர்த்துக் கொட்டுகிறது.

* * * * *

www.tamilarangam.net

பெயர் பொன்னம்பலம். இவன்ரை பெயர் சிறீஸ்கந்தனோ அல்லாட்டிப் பாலஸ்கந்தனோ அல்லது ஸ்கந்தகுமாரோ தெரியாது. அது இப்ப முக்கியமில்லை. ஆனால் இவனைத் தேப்பன் கூப்பிடுறது 'அப்பு' எண்டு. அப்ப –

பொன்னம்பலத்தாற்றை பெடியனை... பொன்னம்பலத்தார் கூப்பிடுறது அப்பு எண்டால் மகனுக்குரிய பெயர் நிச்சயமாகப் 'பொன்னப்பு' என்றுதான் இருக்கவேணுமெனக் கொயிலடிப் பெடியள் நினைத்தார்கள், அதில் தவறேதும் இல்லை.

* * * * *

அப்பு வந்து கேட்டான்,

"என்னடா ரகு, சும்மா சோம்பேறியா இருக்காதை!, வாவன் சூத்திரக் கிணறு வளைப்பம்" என்று.

பொன்னப்புவும் ரகுவும் சூத்திர மாடுகள் வளைக்கும் அந்த ஆசனத்தில் குந்தியிருந்தார்கள்.

வயது விடலைப் பருவம்.

வெங்காயம் கிண்டப் போன 'கந்தி' சொன்னாள்.

"ஆ... ஆ... நல்லாயிருக்கு, இண்டைக்குத் தண்ணி பாஞ்சாப் போலதான்" என்று.

கிடக்கு எண்டுபோட்டு கண்களை வெட்டி மீண்டும் பார்த்தான்.

அப்பிடித்தான் தெரிஞ்சது.

"பொன்னப்பு எனக்குக் களைக்குது நான் கொஞ்சநேரத்திலை வாறன்" என்றான் ரகு.

"தலையைச் சுத்துது எண்டாப் போவன், நான் வளைப்பன்" என்றான் பொன்னப்பு.

நன்றியைச் சொல்லாமல் சொன்னான் ரகுநாதன்.

ஆனா, பொன்னப்பு செய்த வேலைதான் இதெல்லாம்.

பொன்னப்பு என்னை மறிச்சிருக்கலாம்.

ஆருக்குத் தெரியும்?

பொன்னப்பு மறிச்சிருந்தால் சூத்திர மாடுகளை வளைச்சிருப்பன்.

மறிக்காததாலை இவளை......

வளைச்....

ஆனால் இவள் ஏன் பேசாமல்.... ஏதோ இதுக்காகத்தான் காத்துக் கிடந்ததுபோல இருந்தாள்?

இவர்களுக்கு அப்படியென்ன செக்ஸ்ல் நாட்டம்?

நான்தான் பேயன் அலையிறேன் என்றால் இதுகளுமா?

என் கைபடும்போது "ஐயோ கற்பழிக்கிறான்" என்று கத்த வேண்டாமா?

"தலைச்சுத்து எல்லாம் மாறிட்டுதோ?" என்று கேட்டான் அப்பு.

"இப்பதான் நல்லாச் சுத்துது" என்றான் ரகு.

(இனி)



www.tamilarangam.net

www.tamilarangam.net



● திருச்செல்வம் திலீபன்


# குழந்தைகள் துஸ்பிரயோகம்

*வயசு: ஒரு லைசென்ஸ்*

"இவர்கள் வளர்ந்தவர்கள், வயது முதிர்ந்தவர்கள். இவர்களுக்கு மரியாதை கொடுக்க வேண்டும்" இது எமது சமுதாயக் கட்டுப்பாடு. அறிவில் முதிர்ந்தும், பட்டப்படிப்பு முடித்தும் வயதில் குறைந்திருந்தால் அவன் அடங்கியே போகவேண்டும். தனது கருத்துகளை வயதுமுதிர்ந்தவர்கள் முன் சொல்ல முடியாது.

இந்த வயதைக் காட்டிப் பெற்றோர் பிள்ளைகளை வெருட்டுவதைக் கண்டிருப்பீர்கள். ஒரு வளர்ந்தவர் சொல்லும் கருத்துக்கு முன்னால் ஒரு குழந்தை ஒரு கேள்விகேட்க இயலாது. எமது வளர்ந்தவர்கள் அக் குழந்தை ஏன் இப்படிக் கேட்கிறது என்பதை உணர்வதில்லை. இதனால் சமூகம் பலாத்காரம் கொண்டதாக ஆக்கப்படுகிறது. பிள்ளைகள் சுணைகெட்டுவிடும் என்பார்கள்.

அடி வாங்காது அமைதியான சூழலில் வளரும் பிள்ளைகளுக்குச் சாதாரணமாக விளங்கும் ஒரு விடயம், பலாத்காரம், வன்முறைகள் நிறைந்த சூழலில் வளரும் குழந்தைக்கு அடித்துச் சொல்லும்போதுதான் விளங்குகிறது. எமது நாட்டில் "அடித்து வளராத பிள்ளையும் இல்லை, முறித்து வளராத முருங்கையும் இல்லை" எனக் கூறுவார்கள். எமது நாட்டுப் பெற்றோரதும் வளர்ந்தவர்களதும் முட்டாள்த் தனத்துக்கு இது ஒரு எடுத்துக் காட்டு. நாம் அடிப்பதால் பிள்ளைகளின்



www.tamilarangam.net

பெரியவர்கள், தாய், தந்தையர், பிள்ளைகளை நாயே பேயே கழுதை என்றெல்லாம் வசைபாடுவதைக் கேட்டிருப்போம். இப்படியான நிகழ்வுகள் பிள்ளைகளின் அடிமனதில் தாழ்வு மனப்பான்மையையும், உறுதியற்ற சிந்தனைகளையும் தன்னம்பிக்கைக் குறைவையும் ஏற்படுத்துகிறது.

ஒரு பிள்ளை குழப்படி என்று அடிப்பது எமது நாட்டில் கலாசாரமாகிவிட்டது. வீட்டை வந்தால் தாய் தந்தையர் அடி உதை, வெளியே போனால் நண்பர்கள், எதிரிகள் அடி உதை, பாடசாலை போனால் வாத்தியார் அடி உதை. இப்படி வாழ்க்கையே பலாத்காரமாகி விடுகிறது.

மூளையை மழுங்கடிக்கிறோம், பலாத்காரத்தைப் பிள்ளைகள்மேல் பிரயோகிக்கிறோம். பிள்ளைகளையும் அதே வழிகளில் நடக்கத் தூண்டுகிறோம்.

நோர்வே, சுவீடன், கனடா உட்படப் பல ஐரோப்பிய நாடுகளில் பெற்றோர் பிள்ளைகள்மீது தொடர்ந்து வன்முறை பாவிப்பது கண்டுபிடிக்கப் பட்டால் பிள்ளையை அரசு சுவீகாரம் செய்துகொள்ளும். பெற்றோரல்லாத ஏனையோர் பிள்ளைகளின்மீது வன்முறை பாவிப்பின் வழக்குத் தொடரப்படும். இந்த நாடுகளின் கருத்துப்படி குழந்தைகள் நாட்டின் சொத்து. தாய் தந்தையர் பிள்ளைகளை ஒழுங்காக வளர்க்கும் பொறுப்பு உடையவர்கள். வயதுவந்த பெரியவர்கள் பிள்ளைகளின்மீது எதையும் செய்யலாம் என்பது சட்டவிரோதமானது. சட்டம் வயசுக்கு லைசென்சு கொடுக்கவில்லை.

தம்பி அண்ணனுக்கு மரியாதை கொடுக்கவேண்டும். ஏன்? பிந்திப் பிறந்ததால் அவன் எந்தவிதத்தில் குறைந்துவிடுவான். அண்ணன் பத்து வயதில் செய்வதை இவன் எட்டுவயதில் செய்யலாம். பத்து வயதில் அவன் பத்து மடங்கு கூடவும் செய்யலாம். வயசு வெறும் காலவளர்ச்சியே தவிர, அறிவு வளர்ச்சியை அது நிர்ணயிக்காது.

வயது வந்தவர்கள் பலர் இளம்பெண்கள்மேல் இச்சை கொண்டு, தமது ஸ்பரிச ஆசைகளைத் தீர்த்துக் கொண்டதையும், கொள்ள முயற்சித்ததையும் பார்த்திருக்கிறேன். சமூகத்தில் தமக்குள்ள அந்தஸ்தைப் பயன்படுத்தி இவர்கள் செய்யும் லீலைகள் ஏராளம். இவர்கள் தமக்குத் தாமே லைசென்சு கொடுக்க முயற்சிக்கிறார்கள். இவர்களுக்கும் வயது ஒரு அனுகூலம்.

"என்ரை பிள்ளை ஒரே குழப்படி" இப்படிப் பல பெற்றோர் சொல்வதைக் கேட்டிருக்கிறேன். இதற்குக் காரணம், பிள்ளையால் ஒரு குறிப்பிட்ட விடயத்தில் தனது கவனத்தைச் செலுத்த முடியவில்லை. அந்தக் குழந்தையின் மூளைக்குத் தேவையான தகவல்கள் கிடைக்கவில்லை. அக்குழந்தை தகவல்களைத் தேடும். உதாரணமாக ஒரு பெண்குழந்தை, ஆணுறுப்பைக் கண்டுவிட்டால் அதுபற்றிக் கேட்கும். ஆனால் பெரியவர்களோ 'சீ எளியநாயே அதைப் பற்றி என்ன கதை?' என்று கட்டுப் படுத்துவதுடன், பிள்ளையை ஒழுங்காக வளர்ப்பதாக நினைக்கிறார்கள்.

இது சரியான பிழை. ஏனெனில் அப்பிள்ளையின் தேடல் அது என்ன என்பது. பதில் கிடைக்கவில்லை. எனவே அப்பிள்ளை தொடர்ந்து அதுபற்றிய தகவல்களைத் தேடும். இப்போது நேரடியாக அதுபற்றிய விளக்கம் கிடையாது என்று தெரிந்தவுடன், மறைமுக வழிகளில் அதைப் பற்றி அறிய முயற்சிக்கும்.

வயது வந்தவர்கள் செய்வது எல்லாம் சரியுமல்ல, வயது குறைந்தவர்கள்

www.tamilarangam.net

செய்வதெல்லாம் பிழையுமல்ல. வயது வந்தவர்கள் செய்த பிழைகளாலும்தான் எமது சமூகம் இன்று இந்த நிலையில். வயதை மறந்து மனிதனுக்கு மனிதன் மரியாதே கொடுப்போம். வளர்ந்தவர்கள்தான் குழந்தைகளுக்கு மரியாதை கொடுக்க வேண்டும். அவர்கள்தான் எமது நாட்டின், எமது தலைவிதியின் எதிர்காலம். குழந்தைகளுக்கு லைசென்சு கொடுப்போம். அவர்களது வயதுக்கு மரியாதை கொடுப்போம். அவர்களது அறிவுத் தாகத்திற்கு அன்பாகப் பதில் சொல்வோம். ●



ஒரு அமைப்பு.



இங்கு வாழும் வெளிநாட்டவர்கள் பலர் தமது மொழியறிவின் பற்றாக்குறையாலும், நோர்வேஜிய சட்டதிட்டங்கள் பற்றிய போதிய அறிவின்மையாலும் தாம் வாழும் சூழலில் பல கஷ்டங்களை எதிர்நோக்குகின்றனர். இவ்வாறான வெளிநாட்டவர்களுக்கு இலகுவாக உதவிகளைப் பெறக்கூடியதாக பல்கலாச்சாரத் தகவல் மையம் (Flerkulturelt informasjonssenter) ஒன்று ஒஸ்லோவில் இயங்குகிறது.

ஒஸ்லோவின் பியெர்க்க நகர்ப்பிரிவால் (Bjerke bydel) வெயிற்வெத்தில் நடத்தப்படும் இந்த மையத்தில் மொழிபெயர்ப்பாளர் உதவி, விண்ணப்பங்கள் எழுதுவதற்கான உதவி, அரச நிறுவனங்கள் பற்றிய தகவல்கள் என்பனவற்றைப் பல வெளிநாட்டவர்கள் (தமிழர் உட்படத்) தமது தாய்மொழியிலேயே பெறலாம்.

தொலைபேசி: 22651020

மாயன்


www.tamilarangam.net

# நாளை பற்றிய நம்பிக்கைகள்

ஏஎம்.றஸ்மி
அக்கரைப்பற்று

நண்ப,
நானின்னும் நம்பிக்கையோடேயிருக்கிறேன்;
நம்மட்டில்
எண்ணிப்பார்த்து மட்டுமே
சிலிர்த்து,
ஆனந்தமடையக் கூடியது என்றாகிப்போன
அந்த வாழ்வு
வெகுவிரைவில் நம்மால் வாழப்படுமென்பதில்.

அதன் பொழுதுகளில்:




நாய்குரையா இரவுகளில்
கனநேரம் உறங்கி நாமாக எழலாம்,
உறைந்து கிடக்கிற இரத்தக் கட்டிகளை
கொசுக்கள் அப்புவது போலவும்
கனவுகள் வரா,
சின்னாபின்னமாகிக் கிடக்கிற
அரைகுறை அங்கங்களிடைய
நம் சகோதரர்களைத் தேடிப் பொறுக்குகிற
அவலம் நேரா,
இது உனக்கான தோட்டாவெனச் சொல்லி
உயிர்நடுங்கவைக்கும் எவனும் இரான்,
உரிமைகளைக் குறுக்கியும்
கிளர்வுகளை அமுக்கியும் அடிமைப்படுத்துகிற
சண்டித்தனங்கள் இடம்பெறா,
நம்வரையில் வீட்டுள் முடங்கிக் கிடத்தலென
அர்த்தம் கொள்ளப்படுகிற மாலைப்பொழுதுகள்
ஆயிரம் அர்த்தங்கள் பெறும்,
உன் திருவிழா நாட்களில் நாங்களும்
என் பெருநாட் தினங்களில் நீங்களும்
குதூகலிக்கிற நிலைமை மீண்டும் கைகூ

நண்ப, நம்பிக்கையோடிரு.
அந்த வாழ்வு
வெகுவிரைவிலேயே நம்மால் வாழப்படும்.

வாழப்படும்